# அத்தியாயம் 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு


**சாதகமான உலகளாவிய பொருளாதார சூழல் 2007இல் காணப்பட்டதன் காரணமாக வெளிநாட்டுத்துறை 2007இல் அதன் வலுவான செயலாற்றத்தினை தொடர்ந்தும் வலுப்படுத்தியது. சென்மதி நிலுவை தொடர்ந்தும் மூன்றாவதாண்டாக மிகையைப் பதிவு செய்தது.** தீவிரமான உலகளாவிய போட்டி காணப்பட்டதற்கிடையிலும் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் வளர்ச்சி கண்டன. குறிப்பாக, முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் கீழ் ஐரோப்பிய சந்தைகளை அதிகளவில் அடைய முடிந்தமையின் பயனாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் கணிசமாக வளர்ச்சி கண்டன. 2006இன் ஐ.அ.டொலர் 3 பில்லியனை விஞ்சிய ஆடை ஏற்றுமதிகளின் உயர்ந்த செயலாற்றத்தினைத் தொடர்ந்து, 2007இல் தேயிலை ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 1 பில்லியனை விஞ்சி குறிப்பிடத்தக்க செயலாற்றத்தினைக் காட்டியன. இறக்குமதிகளும் அதிகரித்து முதலீட்டு மற்றும் இடைநிலைப் பொருட்களுக்கான உயர்ந்த கேள்வியையும் மசகு எண்ணெய் உட்பட பன்னாட்டுப் பண்டங்களின் விலைகள் கடுமையாக அதிகரித்தமையினையும் பிரதிபலித்தன. எனினும், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளுடன் ஒப்பிடுகையில் இறக்குமதி செய்யப்பட்ட பல இன்றியமையாத பொருட்களின் உயர்ந்த பன்னாட்டு விலைகள், நாட்டின் வர்த்தக மாற்று விகிதம் 1.0 சதவீதத்தினால் மோசமடைய வழிவகுத்தது. மேலும், வரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையானது அதிகரித்த தனியார் பணவனுப்பல்களின் காரணமாக பெருமளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் போக்குவரத்து, பயணம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள் போன்ற ஏற்றுமதிப் பணிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்தும் அதிகரித்தன. ஆண்டின் முதலரைப் பகுதியில் கடுமையாக வீழ்ச்சியடைந்த சுற்றுலா வருகைகள் பின்னரைப் பகுதியில் கணிசமானளவு மீட்சியடைந்தன. பணிகள் கணக்கில்




காணப்பட்ட மிகை, தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து, நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்த உதவியது. இது, 2007இன் மொ.உ.உற்பத்தியின் சதவீத ரீதியில் மேம்பாடடைந்தது. மூலதன மற்றும் நிதியியல் கணக்கில் காணப்பட்ட மிகை, நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட பற்றாக்குறையினை எதிரீடு செய்வதற்கான அளவினைவிட கூடுதலாக இருந்தமையானது சென்மதி நிலுவையின் திரண்ட மிகைக்கு வழிவகுத்தது. இதன் விளைவாக, நாட்டின் வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் வசதியானதொரு மட்டத்திற்கு மேம்பாடடைந்ததுடன் இது 3 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாகவும் காணப்பட்டது.

**அரசாங்கம் அதன் முதலாவது பன்னாட்டு முறி வழங்கலை வெற்றிகரமாக மேற்கொண்டதுடன் இது வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட தொகையினை விட மூன்று மடங்கிற்கும் கூடுதலான கோரலைப் பெற்றமையானது, இலங்கையின் பொருளாதாரத்தில் பன்னாட்டு முதலீட்டாளர் வைத்திருந்த நம்பிக்கையினைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.** இப்பன்னாட்டு முறிவழங்கல் மற்றும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளுக்கான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடு என்பனவற்றின் காரணமாக அரசிற்கான தேறிய மூலதன உட்பாய்ச்சல் 2007இல் உயர்ந்த சாதனை மட்டமொன்றினை அடைந்தது. 2007இல் பெறப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் கணிசமாக அதிகரித்து 2006இல் பதிவு செய்யப்பட்ட முன்னைய உயர்ந்த மட்டத்தினை விஞ்சின. ஆண்டின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வீதத்தில் தேய்வடைந்த ரூபா, நாட்டிற்கான முதலாவது முறியின் வழங்கலிலிருந்தான பெறுகைகளின் உட்பாய்ச்சலுடன் இறுதிக் காலாண்டில் உயர்வடைந்து 2007 இறுதியில் 0.93 சதவீதம் கொண்ட சிறிதளவு தேய்வினைப் பதிவு செய்ததுடன் அதன் பின்னர் சமநிலையொன்றினை அடைந்தது. ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளின் வெளிநின்ற தொகையில் 10 சதவீதம் வரையானவற்றைக் கொள்வனவு செய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்களை அனுமதித்தமையின் மூலம் 2007இல் மூலதனக் கணக்கு மேலும் தாராளமயமாக்கப்பட்டமையும் ரூபாவின் பெறுமதி உயர்விற்குப் பங்களித்ததுடன் நாட்டிற்குள் வரும் வெளிநாட்டு நிதியத்தின் பாய்ச்சலையும் அதிகரித்தது. இலங்கை ரூபாவின் அண்மைய உறுதியான தன்மையானது, வெளிநாட்டு போட்டித் தன்மையினைப் பேணும் பொருட்டு உற்பத்தியாக்க மேம்பாடுகள் மீது கூடியளவு கவனத்தைச் செலுத்துவதற்காக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி போட்டித் துறைகளுக்கான தேவையினை வலியுறுத்துவதாகவுள்ளது. அதேவேளை, 2007இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் சிறிதளவால் அதிகரித்தமைக்கு இலங்கையின் முதலாவது பன்னாட்டு முறிவழங்கல் மற்றும் திறைசேரி முறிகளுக்கான வெளிநாட்டு மூலதனத் தொகை ஏற்கனவே முக்கிய காரணங்களாகும்.

வரைபடம் 5.1 சென்மதி நிலுவை




வரைபடம் 5.2 வெளிநாட்டு செலாவணி வருவாய்களின் முக்கிய மூலங்கள்




## 5.2 வெளிநாட்டுத்துறைக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான பொருளாதார உறவுகளை இணக்கமானதொரு அபிவிருத்தியினூடாக, பொருட்கள் மற்றும் பணிகளிலுள்ள வர்த்தகத்தின் விரிவாக்கத்தின் மீது சிறப்பான வலியுறுத்தல்களை மேற்கொள்வதன் மூலம் வெளிநாட்டுத்துறை தொடர்ந்து சுதந்திரமானதும், தாராளமானதுமான பொருளாதார சூழலில் தொழிற்பட்டு வருகிறது.** நடைமுறைக் கணக்கின் மாற்றக்கூடிய தன்மை, மிதக்கின்ற செலாவணிவீத அமைப்பு மற்றும் மேலும் தாராளமயமாக்கப்பட்ட மூலதனக் கணக்கு என்பன வெளிநாட்டுத்துறை மேம்பாடடைய உதவின. ஏற்றுமதிகள் மீதான அரசாங்கத்தின் கொள்கை, அதிகரித்த பெறுமதி கூட்டல்களூடாக உயர்ந்த வருவாய்களைப் பெறவும் சமமான பிராந்திய பொருளாதார அபிவிருத்தகளினூடாக உருவாக்கப்படுகின்ற நன்மைகள் கீழ்மட்ட மக்களைச் சென்றடைவதனை உறுதிப்படுத்தவும் எதிர்பார்க்கின்றது.

## அட்டவணை 5.1

## சென்மதி நிலுவைப் பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2003 | 2004 | 2005 | 2006 | 2007(ஆ) | 2003 | 2004 | 2005 | 2006 | 2007(ஆ) |
| வர்த்தக நிலுவை | -1,539 | -2,243 | -2,516 | -3,370 | -3,560 | -148,324 | -227,171 | -253,082 | -350,037 | -394,327 |
| ஏற்றுமதிகள் | 5,133 | 5,757 | 6,347 | 6,883 | 7,740 | 495,426 | 583,967 | 638,276 | 716,579 | 856,808 |
| இறக்குமதிகள் | 6,672 | 8,000 | 8,863 | 10,253 | 11,301 | 643,750 | 811,138 | 891,359 | 1,066,615 | 1,251,135 |
| பணிகள், தேறிய | 399 | 419 | 338 | 257 | 239 | 38,443 | 42,735 | 34,043 | 26,660 | 26,301 |
| பெறுகைகள் | 1,411 | 1,527 | 1,540 | 1,625 | 1,711 | 136,123 | 154,746 | 154,877 | 168,802 | 189,266 |
| கொடுப்பனவுகள் | 1,012 | 1,108 | 1,202 | 1,368 | 1,473 | 97,680 | 112,011 | 120,833 | 142,142 | 162,965 |
| வருமானம், தேறிய | -172 | -204 | -299 | -389 | -358 | -16,535 | -20,688 | -30,049 | -40,424 | -39,041 |
| பெறுகைகள் | 170 | 157 | 35 | 311 | 449 | 16,385 | 15,813 | 3,629 | 32,457 | 50,213 |
| கொடுப்பனவுகள் | 341 | 360 | 335 | 700 | 807 | 32,920 | 36,501 | 33,678 | 72,881 | 89,254 |
| பொருட்கள் பணிகள் மற்றும் வருமானம் (தேறிய) | -1,312 | -2,028 | -2,478 | -3,503 | -3,679 | -126,416 | -205,124 | -249,088 | -363,801 | -407,067 |
| தனியார் மாற்றல்கள், தேறிய | 1,205 | 1,350 | 1,736 | 1,904 | 2,214 | 116,350 | 136,672 | 174,542 | 197,861 | 245,006 |
| பெறுகைகள் | 1,414 | 1,564 | 1,968 | 2,161 | 2,502 | 136,475 | 158,291 | 197,968 | 224,678 | 276,814 |
| கொடுப்பனவுகள் | 209 | 214 | 233 | 257 | 288 | 20,125 | 21,619 | 23,426 | 26,817 | 31,808 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 36 | 30 | 93 | 101 | 97 | 3,441 | 3,038 | 9,300 | 10,524 | 10,677 |
| நடைமுறைக் கணக்கு | -71 | -648 | -650 | -1,499 | -1,369 | -6,625 | -65,414 | -65,246 | -155,416 | -151,383 |
| மூலதன, நிதியியல் கணக்குகள் | 722 | 631 | 1,224 | 1,808 | 2,097 | 69,723 | 60,539 | 123,866 | 190,768 | 230,978 |
| மூலதன கணக்கு | 74 | 64 | 250 | 291 | 269 | 7,146 | 4,974 | 25,108 | 30,292 | 29,669 |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | 74 | 64 | 250 | 291 | 269 | 7,146 | 4,974 | 25,108 | 30,292 | 29,669 |
| பெறுகைகள் | 81 | 71 | 257 | 299 | 278 | 7,768 | 5,643 | 25,863 | 31,171 | 30,735 |
| கொடுப்பனவுகள் | 6 | 7 | 7 | 8 | 10 | 622 | 669 | 755 | 879 | 1,066 |
| நிதியியல் கணக்கு | 648 | 567 | 974 | 1,517 | 1,828 | 62,577 | 55,565 | 98,757 | 160,477 | 201,309 |
| நீண்டகாலம் : | 722 | 680 | 798 | 907 | 1,251 | 69,721 | 69,805 | 80,391 | 95,089 | 140,054 |
| நேரடி முதலீடு | 201 | 227 | 234 | 451 | 548 | 19,450 | 22,826 | 23,505 | 46,985 | 60,768 |
| வெளிநாட்டு நேரடி முதலீடு | 171 | 217 | 234 | 451 | 548 | 16,557 | 21,948 | 23,505 | 46,985 | 60,768 |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | 30 | 10 | - | - | - | 2,893 | 878 | - | - | - |
| தனியார் நீண்டகாலம் (தேறிய) | -33 | 14 | 11 | -35 | 31 | -3,201 | 2,270 | 1,054 | -3,590 | 3,314 |
| உட்பாய்ச்சல்கள் | 101 | 169 | 197 | 139 | 199 | 9,738 | 17,503 | 19,739 | 14,469 | 22,033 |
| வெளிபாய்ச்சல்கள் | 134 | 155 | 186 | 174 | 168 | 12,939 | 15,233 | 18,685 | 18,058 | 18,719 |
| அரச, நீண்ட காலம் (தேறிய) | 554 | 439 | 553 | 491 | 672 | 53,472 | 44,709 | 55,832 | 51,694 | 75,971 |
| உட்பாய்ச்சல்கள் | 913 | 771 | 747 | 932 | 1,290 | 88,106 | 78,299 | 75,309 | 97,690 | 144,146 |
| வெளிபாய்ச்சல்கள் | 359 | 331 | 194 | 441 | 618 | 34,634 | 33,590 | 19,477 | 45,996 | 68,175 |
| குறுங்காலம்: | -75 | -112 | 176 | 610 | 577 | -7,145 | -14,240 | 18,366 | 65,387 | 61,256 |
| பட்டியலிடப்பட்ட முதலீடுகள் | 2 | 11 | 60 | 51 | 101 | 209 | 1,109 | 6,103 | 5,377 | 11,249 |
| தனியார் குறுங்காலம் (தேறிய) | 19 | 28 | 16 | -30 | 20 | 1,877 | 2,514 | 1,640 | -3,066 | 1,868 |
| வர்த்தக வங்கித் சொத்துக்கள் (தேறிய) | -94 | -354 | -223 | 297 | -281 | -9,090 | -45,367 | -19,669 | 23,789 | -31,352 |
| வர்த்தக வங்கிப் பொறுப்புக்கள் (தேறிய) | -2 | 202 | 323 | 293 | 364 | -141 | 27,504 | 30,292 | 39,287 | 38,746 |
| அரச குறுங்காலம் (தேறிய) | - | - | - | - | 372 | - | - | - | - | 40,744 |
| பெறுமதி சீராக்கங்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| பிழைகளும் தவறுகளும் | -148 | -189 | -72 | -105 | -198 | -14,487 | -2,599 | -10,494 | -1,830 | -19,593 |
| திரண்ட நிலுவை (இ) | 502 | -205 | 501 | 204 | 531 | 48,610 | -7,474 | 48,125 | 33,523 | 60,002 |
| நாணய அசைவுகள் (இ) | -502 | 205 | -501 | -204 | -531 | -48,610 | 7,474 | -48,125 | -33,523 | -60,002 |
| ஆன்டுச்சராசரி செலாவணி வீதம் ரூ/ஐ.அ.டொ | | | | | | 96.52 | 101.19 | 100.50 | 103.96 | 110.62 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விகிதம் சதவீதங்களில் (ஈ) | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | -8.1 | -10.9 | -10.3 | -11.9 | -11.0 | -8.1 | -10.9 | -10.3 | -11.9 | -11.0 |
| நடைமுறைக் கணக்கு | -0.4 | -3.1 | -2.7 | -5.3 | -4.2 | -0.4 | -3.1 | -2.7 | -5.3 | -4.2 |
| கொடைகளற்ற நடைமுறைக் கணக்கு | -0.6 | -3.3 | -3.0 | -5.7 | -4.5 | -0.6 | -3.3 | -3.0 | -5.7 | -4.5 |

(அ) இந்த வெளிப்படுத்துகை பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994இலிருந்து கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளன.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) தற்காலிகமானவை

(இ) ஐ. அமெ. டொலர் பெறுமதிகள் ஆண்டின் இறுதி செலவாணி வீதங்களைப் பயன்படுத்தி ரூபாய் பெறுமதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஈ) தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நடைமுறைச் சந்தை விலைகளினாலான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டது.

**2007இல் 4.1 சதவீதமான குறைந்த சராசரி தீர்வை வீதத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு கட்டற்ற வர்த்தகத்திற்கான வாய்ப்பு தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டது.** இதனை இலங்கையின் சராசரி தீர்வை வரையறையான 37.8 சதவீதத்துடன் நன்கு ஒப்பிடப்படுவதுடன் இது சராசரி தீர்வை வீதத்தினை அதிகரிப்பதில்லை என்று உலக வர்த்தக அமைப்பிற்கு நாடு அளித்திருந்த சட்ட ரீதியான கடப்பாடுகளைவிட கூடுதலானதாகும். தீர்வைகள் முக்கிய வர்த்தகக் கொள்கை கருவியாகும். 2004இல், அறிமுகப்படுத்தப்பட்ட 0, 2.5, 6, 15 மற்றும் 28 சதவீதங்களைக் கொண்ட ஐந்து பிரிவுகளைக் கொண்ட தீர்வை அமைப்பு 2007இல் தொடர்ந்தும் நிலவியது. இருபுடை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இறக்குமதிகளுக்கு முன்னுரிமைத் தீர்வைகள் வழங்கப்பட்டன. இவ் அபிவிருத்திகள், வெளிநாட்டு வர்த்தகப்படுத்தல் சூழலில் சந்தைகளை அடையும் வாய்ப்பு, ஒழிவு மறைவற்ற தன்மை மற்றும் ஊகிக்கக்கூடிய நிலைமை என்பனவற்றை மேம்படுத்தின. எனினும், நுகர்வோருக்கு குறிப்பாக பண்டிகைக் காலங்களில் நிவாரணங்களை வழங்குவதற்காகவும் அதிகரித்த இறக்குமதிகளிலிருந்து உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காகவும் 2007இல் நுகர்வுப் பொருட்கள் மீதான தீர்வை வீதங்கள் அடிக்கடி மாற்றங்களுக்குட்பட்டன. 2007இல் இறக்குமதிகளுக்கு ஏற்புடையதான ஏனைய விதிப்புக்களாக சுங்கத் தீர்வை மீதான மேலதிக விதிப்பு (சுங்கத் தீர்வையில் 10 சதவீதம்) பெறுமதிசேர் வரி, துறைமுகம் மற்றும் வானூர்தி அபிவிருத்தி தீர்வை, சமூகப் பொறுப்பாண்மை தீர்வை, கலால் தீர்வை, (குடிவகை, புகையிலை உற்பத்திகள் மற்றும் ஊர்திகள்) மற்றும் இன்றியமையாதனவல்லா நுகர்வுப் பொருட்கள் மீதான தீர்வை என்பன காணப்பட்டன. அதேவேளை இறக்குமதிகள் மீதான மேலதிக விதிப்புக்கள், பெறுமதிசேர் வரி, சமூக பொறுப்பாண்மை தீர்வை, தீர்வை வரி மற்றும் சுங்கத்தில் ஏற்புடையதான மற்றைய விதிப்புக்களுக்குப் பதிலாக தெரிந்தெடுக்கப்பட்ட பத்து உணவுப் பொருட்களின் மீது தனியொரு குறித்துரைக்கப்பட்ட சுங்கத்தீர்வை வீதம் அறிமுகப்படுத்தப்பட்டது.

**இலங்கை இருபுடை மற்றும் பிராந்திய உடன்படிக்கைகளில் உறுதியாக இருந்த வேளையில், உலகளாவிய வர்த்தகப்படுத்தல் முறைமையில் நாட்டின் வெளிப்படுத்துகையினை வலுப்படுத்துவதற்கான நீண்டகால உபாயமொன்றாக உலக வர்த்தக அமைப்பின் பல்புடை முனைவுகளை பேணி வருகின்றது.** வர்த்தகப் பங்காளர்களுடனான உள்நாட்டுப் பொருளாதாரத்தின் ஒருங்கிணைப்பு, வர்த்தகப்படுத்தல் ஒழுங்குகளை மேற்கொள்கின்ற போது எதிர்பார்க்கப்பட்டவாறு, நேரடியான பொருளாதார நன்மைகள் மட்டுமன்றி, அத்தகைய உடன்படிக்கைகளில் எதிர்பார்க்கப் பட்டவற்றிற்கும் அப்பால் பல்வேறு தற்செயலான நிகழ்வுகளின் மூலமான நன்மைகளும் காணப்படுகின்றன. பாரம்பரிய உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் தென்னாசிய வர்த்தக மையமாக இலங்கையை அபிவிருத்தி செய்வது என்பனவற்றின் பொருட்டு, தீவிரமான ஒரு உறுப்பு நாடு என்ற ரீதியில் பிராந்திய வர்த்தக ஒருங்கிணைப்பினை தொடர்ச்சியாக ஆதரித்து வருகின்றது. இது தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை, பல்துறை வாரியான தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முனைவு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர கரையோர நாடுகளின் அமைப்பு என்பனவற்றின் மூலம் தற்பொழுது இது யதார்த்தமாகி இருக்கிறது.

**இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் வழிகாட்டலுக்கமைவாக, தொடர்ச்சியான தாராளமயமாக்கலைத் தொடர்ந்து அடிக்கடி மாற்றமடையாத உற்பத்திகளுக்கான பாதுகாப்பின் அளவும் படிப்படியாக அகற்றப்பட்டது.** அடிக்கடி மாறுபடும் உற்பத்திகள் தவிர, இந்தியாவிலிருந்து இலங்கைச் சந்தைக்குள் வரும் அனைத்து பண்டங்களும் 2008 மார்ச் இறுதியிலிருந்து தீர்வையின்றி இருக்கும். இலங்கை மிக நீண்ட காலங்களுக்கு முன்னரே 2003இல் அத்தகைய

**அட்டவணை 5.2 சராசரி இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)**

| விடயம் | 2003 | 2004 | 2005 | 2006 | 2007(ஆ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | 13.5 | 10.4 | 10.4 | 11.2 | 12.4 |
| உணவும் குடிபானங்களும் | 14.2 | 8.5 | 9.6 | 10.7 | 13.5 |
| அரிசி | 29.3 | 4.9 | 10.6 | 23.4 | 3.1 |
| மா | 11.5 | 7.2 | 3.8 | 33.7 | 31.9 |
| சீனி | 16.8 | 4.6 | 1.5 | 1.9 | 23.9 |
| கோதுமையும் மெசுலினும் | 0.0 | 0.1 | 1.1 | 5.6 | 6.3 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 12.2 | 7.9 | 10.2 | 9.6 | 7.7 |
| கருவாடு | 10.8 | 5.9 | 5.9 | 5.0 | 2.9 |
| ஏனைய மீன் உற்பத்திகளும் | 7.9 | 10.0 | 9.8 | 7.8 | 4.9 |
| ஏனையவை | 22.3 | 17.4 | 22.0 | 24.2 | 20.8 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 13.0 | 12.2 | 11.1 | 11.7 | 11.2 |
| உந்து ஊர்திகளும் துவிச்சக்கர வண்டிகளும் | 22.1 | 21.1 | 18.9 | 18.3 | 16.3 |
| வானொலிப் பெட்டிகளும் தொலைக் காட்சிப் பெட்டியும் | 8.9 | 9.4 | 13.6 | 7.1 | 7.7 |
| இறப்பர் ரயர்களும் ரியூப்புக்களும் | 26.0 | 25.8 | 26.2 | 19.2 | 22.4 |
| மருந்தாக்கல் பொருட்கள் | 0.6 | 0.6 | 0.5 | 0.3 | 0.4 |
| ஏனையவை | 9.2 | 8.9 | 8.7 | 10.3 | 10.6 |
| **இடைநிலைப் பொருட்கள்** | 1.5 | 1.9 | 2.1 | 1.5 | 1.5 |
| வளமாக்கி | 2.6 | 3.1 | 2.7 | 2.5 | 2.7 |
| மசகெண்ணெய் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| ஏனைய பொற்றோலிய உற்பத்திகள் | 0.8 | 0.9 | 1.9 | 2.3 | 1.6 |
| இரசாயன கூறுகளும் கலவைகளும் | 2.2 | 2.6 | 2.0 | 1.8 | 1.9 |
| நிறமூட்டல், தோல் பதனிடல், வர்ணமிடல் | 4.6 | 4.5 | 4.4 | 2.6 | 2.5 |
| தாளும் தாள் மட்டையும் | 5.4 | 6.0 | 6.0 | 2.4 | 2.2 |
| புடவைகள் | 0.1 | 0.0 | 0.1 | 0.1 | 0.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 3.3 | 4.3 | 4.5 | 3.3 | 3.3 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | 7.2 | 6.1 | 5.8 | 5.2 | 4.8 |
| கட்டடப்பொருட்கள் | 7.7 | 9.0 | 7.8 | 9.2 | 7.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 12.9 | 11.9 | 9.7 | 7.0 | 7.1 |
| பொறிகளும் கருவிகளும் | 5.6 | 3.2 | 3.3 | 3.2 | 2.7 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 4.6 | 5.0 | 5.3 | 3.4 | 4.2 |
| **சராசரி தீர்வை** | 5.3 | 4.5 | 4.6 | 4.3 | 4.1 |

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பு

(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

சலுகைகளைப் பெற்றிருந்த போதும், இலங்கை இன்னமும் ஒரு சில ஏற்றுமதிகளிலேயே பெருமளவிற்கு தங்கியிருப்பதுடன் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்துவதிலும் பின்தங்கியுள்ளது. எனவே, இந்தியா விரைவாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தினைக் கொண்டதொரு நாடாக இருப்பதனால், ஏற்றுமதியாளர்கள் இவ்வுடன்படிக்கையிலிருந்து அவர்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நேரடியான முயற்சிகளை எடுத்தல் வேண்டும். அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கையின் கீழ், இந்தியாவுடனான பேச்சு வார்த்தைகள் ஏற்கனவே வர்த்தகத்தில் காணப்பட்ட தடைகளை நீக்குவதற்கு உதவியுள்ளன. அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கை பேச்சு வார்த்தையின் ஒரு கட்டம், இரு நாடுகளுக்குமிடையிலான பொருட்களின் வர்த்தகத்தினை விரிவாக்குவது பற்றியதாக இருந்தது. கல்கத்தா மற்றும் கொச்சி ஆகிய இரு இந்திய துறைமுகங்களூடான தேயிலை இறக்குமதியினை மட்டுப்படுத்துகின்ற துறைமுகக் கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கு இந்தியா இணங்கியது. இவ்வகற்றலானது, இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 12.5 மில்லியன் கி.கிறாம் தேயிலைக்கான தீர்வை வீத அனுமதிப் பங்கினை இலங்கை ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்துவதனை இயலச் செய்தது. துணிகளின் மூலம் மற்றும் துறைமுகக் கட்டுப்பாடுகள் என்பன மீது எவ்விதமான நிபந்தனைகளுமின்றி 3 மில்லியன் ஆடைத் துண்டுகளுக்கு தீர்வை வீத அனுமதிப் பங்கினை வழங்கவும் இந்தியா உடன்பட்டது. இவற்றைத் தொழிற்படுத்துவதற்கான நடைமுறைகள் முடிவடைந்திருக்கின்றன.

**2005இல் பாகித்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர், பாகித்தானுடனான இலங்கையின் வர்த்தகம் 2007 அளவில் 27 சதவீதத்தினால் அதிகரித்தது.** 2007இல் இலங்கையின் ஏற்றுமதிகள் 67 சதவீதமான தீர்வைக் குறைப்பினை பெற்றிருக்கின்ற வேளையில் இலங்கையில் சந்தைப் படுத்தப்படும் பாகித்தான் பொருட்களுக்காக அது 40 சதவீதமான தீர்வைக் குறைப்பினைப் பெற்றது. இலங்கையின் ஏற்றுமதிகள் எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் அதிகரித்திருக் காமையினால் வர்த்தக நிலுவை தொடர்ந்தும் பாகித்தானுக்கு சாதகமாகவேயுள்ளது. ஆடைகள், தேயிலை போன்ற இலங்கையின் முக்கிய ஏற்றுமதி விடயங்கள் எதிர்க்கணியப் பட்டியலில் இருந்தபோதும், தீர்வை வீத அனுமதிப்பங்கு மற்றும் உயர்ந்தளவு தீர்வை முன்னுரிமைகள் இப்பொருட்களுக்கு கிடைக்கத்தக்கதாகவே இருந்தன. எனினும், பாகித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றம் மோசமாக இருந்தமைக்கு தீர்வை வீத அனுமதிப்பங்கு குறைந்தளவில் பயன்படுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும். பாகித்தான், ஆண்டொன்றிற்கு 10,000 மெற்றிக் தொன் தேயிலைக்கு பூச்சிய தீர்வை வீதத்தில் தீர்வை வீத அனுமதிப் பங்கினையும் 1,200 மெற்றிக் தொன் வெற்றிலைக்கு ஆண்டிற்கு 35 சதவீத முன்னுரிமை அளவுகளையும் 3 மில்லியன் ஆடைத் துண்டுகளுக்கு பூச்சிய தீர்வை வீதத்தினையும் அனுமதித்தது. பணிகள், முதலீடு மற்றும் சுங்க ஒத்துழைப்பு என்பனவற்றை கூட்டிணைப்பதன் மூலம் தற்போதைய உடன்படிக்கையின் செயற்பரப்பினை அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கைக்கு விரிவாக்குவதற்கு இரு நாடுகளும் உடன்பட்டிருக்கின்றன. இது, இரு நாடுகளும் தமது வர்த்தக முதலீட்டு உள்ளார்ந்த வளத்தினை பயன்படுத்திக் கொள்ளவும் இருபுடை உறவுகளை மேலும் ஆழப்படுத்திக் கொள்ளவும் உதவும்.

**முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் கீழ் அதிகரித்தளவில் சந்தைகளை அடைய முடிந்தமையின் காரணமாக ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் இலங்கை வர்த்தக வாய்ப்புக்களை உருவாக்கக்கூடியதாக இருந்தது.** ஆடைத்துறையைப் பொறுத்தவரை முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் கீழான நன்மைகள் பன்னாட்டு சந்தையில் காணப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கான சாதனமாகக் காணப்பட்டதுடன் இக்கைத்தொழில் ஒப்பந்த ரீதியான தயாரிப்பாளர் என்ற நிலையிலிருந்து முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட பணியினை வழங்குபவர் என்ற நிலைக்கு மாற்றமடைய உதவியது. முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் குறிக்கோள் கைத்தொழிலுக்கான துணைப் பொருட்களை வழங்கும் பின்புலத்தினை ஒருங்கிணைத்தல் அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய கைத்தொழில்களை உருவாக்குதல் என்பனவற்றின் மூலம் விரைவான கைத்தொழில் மயமாக்கலை ஊக்குவிப்பதனால் பல கைத்தொழில்களிலும் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்திகள் இடம் பெற்றுள்ளன. பாரியளவு பின்னல் தொழிற்சாலைகளும், துணை உற்பத்தி தயாரிப்புப் பிரிவுகளும் நிறுவப்பட்டமைக்குப் புறம்பாக, முக்கியமான ஏற்றுமதியாளர்கள் தொடர்ந்தும் ஆடைக் கைத்தொழிலின் இயலாற்றலைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தினர். சமூக மற்றும் சூழல் துறைகளுக்கிடையில் சமநிலையொன்றினைப் பேணுவதன் மூலமாக விழுமியமும் உறுதிப்பாடும்மிக்க நடைமுறைகளுக்கான அவர்களின் கடப்பாட்டினை அதிகரித்தமையின் மூலம், முக்கிய ஏற்றுமதியாளர்கள், வணிக அடையாளம் கொண்ட ஆடைகளை உற்பத்தி செய்யும் உலகத்தரம் வாய்ந்த கம்பனிகளின் பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வினை வழங்குவோராக மாற்றமுறுவதற்கு கடுமையாக உழைத்தனர்.

**ஈரானுக்கும் இலங்கைக்குமிடையிலான இருபுடை உறவுகள் 2007இல் பாரிய பாய்ச்சலொன்றை ஏற்படுத்தியது.** இரு நாடுகளும் பொருளாதாரம், வர்த்தகம், கலாச்சாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பினை மேலும் மேம்படுத்துவதற்கான தமது தீர்மானத்தினை வலியுறுத்தின. அண்மைய பேச்சு வார்த்தைகள் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்றிட்டம், சபுகஸ்கந்த எண்ணெய்

## சிறப்புக் குறிப்பு 12

## முன்னுரிமையிலான வர்த்தக நுழைவுகளும் அதன் தாக்கங்களும்

சுதந்தர வர்த்தக உடன்படிக்கைகளுக்கு இட்டுச் செல்லும் முன்னுரிமையிலான வர்த்தக ஒப்பந்தங்கள் இரண்டு நாடுகள் மட்டும் பங்குபற்றும் இருபுடை ஒப்பந்தங்களாக அல்லது இரண்டு நாடுகளுக்கு மேல் பங்குபற்றும் பல்புடை ஒப்பந்தங்களாக இருக்கின்றது. ஆனால் உலகம் முழுவதற்கும் பொதுவானதாகவில்லை. இவை பொதுவாக பங்குபற்றும் நாடுகளுக்கிடையில் காணப்படும் வர்த்தக தடைகளைக் குறைப்பதற்கும் அதன் விளைவாக அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பொருளாதார ஒருமைப்பாட்டினை அதிகரிப்பதனையும் நோக்காகக் கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, பங்குபற்றும் அங்கத்துவ நாடுகள் நன்மையடையக் கூடியவகையில் தீர்வையினைக் குறைப்பதனூடாக இந்த உடன்படிக்கைகள் அங்கத்துவ நாடுகளின் சந்தை வாய்ப்பினை அதிகரிக்கின்றது. திறந்த வர்த்தக உடன்படிக்கைகள், அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான பன்னாட்டு வர்த்தக பங்குபற்றுதலை உருவாக்குவதுடன் அங்கத்துவ அரசாங்கங்கள் அனைத்து அங்கத்தவர்களும் நன்மைகளை சமனாக பெறக்கூடிய விதத்தில் திறந்த வெளிப்படையான நடைமுறையினை பின்பற்றுவதற்கு ஏற்ற தன்மையினையும் உருவாக்குகிறது. திறந்த வர்த்தக உடன்படிக்கையானது தனியே வர்த்தகத்தினை மட்டும் கையாளாது வெளிநாட்டு நேரடி முதலீடு, அரச சேகரிப்புக்கள் மற்றும் ஏனையவற்றையும் கொண்ட இரு பகுதியும் நன்மையடையக் கூடியவிதத்திலான சட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட திட்டச் சூழலில் வெற்றி மேல் வெற்றி என்ற நிலைமையினையை உருவாக்குகின்றது. அங்கத்துவ நாடுகளின் அனைத்துத் துறைகளுக்கும் திறந்த வர்த்தக உடன்படிக்கைகளின் நன்மைகள் விரிவாக்கப்படுவதனூடாகவே நேரடியான முன்னோக்கிய பொருளாதார ஆதாயங்கள் மற்றும் ஏனைய தற்செயலாக நிகழக்கூடிய நன்மைகளை அடையக் கூடியதாக இருக்கும்.

இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளுக்கு அளப்பரிய நன்மைகளை வழங்கும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் போன்றதொரு திட்டம் என்பது முன்னுரிமைச் சந்தை நுழைவினை வழங்குகின்ற வர்த்தக அபிவிருத்தியின் பரஸ்பரம் விட்டுக் கொடுக்கத் தேவையற்ற ஒருபுடைக் கருவியாகும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் வாய்ப்பின் கீழ் இலங்கை போன்ற நாடுகளுக்கு சிறந்த ஆளுகை, மனித உரிமைகள், சூழல் மற்றும் தொழிலாளர் நியமங்கள் தொடர்பிலான 27 பன்னாட்டு விதிகளை அமுல்படுத்துதல் போன்றவற்றிற்குப் பதிலாக வழங்கப்பட்ட சலுகையாகும். ஏனைய வர்த்தக உடன்படிக்கைகளைப் போலல்லாது பரஸ்பர விட்டுக் கொடுப்பற்ற ஒரு உடன்படிக்கை இறக்குமதி செய்யும் நாட்டிற்கும் மற்றும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + இல் 27 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்குகின்றது என்ற நிலை ஏற்படுமானால் நேரடி நன்மைகளை வழங்காது. பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கொரு முறை மீளாய்வு செய்யப்படுவதுடன், தற்போதைய திட்டம் 2008இன் 2ஆம் அரையாண்டில் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருக்கிறது. ஆரம்பத்தில் வழங்கப்பட்ட காலத்திற்கு மேலாக பரஸ்பரமற்ற சலுகைகளை தொடர்வது எல்லா விதிகளின் வெற்றிகரமான அமுல்படுத்தலிலும் உறுதிப்பாட்டிலும் மாத்திரமன்றி ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சமூக அரசியல் மற்றும் வர்த்தக கொள்கைகளில் தங்கியிருப்பதனால் முன்னுரிமை சலுகைகள் தொடர்ந்தும் கிடைப்பதில் எப்பொழுதும் இடர்நேர்வு காணப்படுகின்றது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டங்களினால் கிடைக்கப் பெறும் நன்மைகள் குறுங்காலத் தன்மை கொண்டவை. பரஸ்பரமற்ற வர்த்தக உடன்படிக்கைகள் பயன்பெறும் நாட்டிடமிருந்தான ஏற்றுமதிகளுக்கென முன்னுரிமையான சந்தை வாய்ப்பினை மீளப் பெற்றுக் கொள்வதன் மூலம் எந்த நேரமும் முடிவுக்குக் கொண்டு வரப்படலாம். ஏனைய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் மூலமான நன்மைகளும் காலப்போக்கில் படிப்படியாக இல்லாது போகலாம். வெற்றிகரமான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை உருவாக்குவது அங்கத்தவரல்லா நாடுகளுக்கு நடைமுறையிலுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் அங்கத்துவத்தினை நாடுவதற்கோ அல்லது புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை உருவாக்குவதற்கோ ஊக்கமளிக்கின்றது. எனவே, அதிகளவான பொருளாதாரங்கள் குறிப்பாக பாரிய வர்த்தக பங்காளர்களுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை நாடுவதனால் நடைமுறையிலுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் முன்னுரிமைகள் படிப்படியாகக் குறைந்து செல்லும்.

அதேவேளை, சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் முன்னரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் என்பவற்றிலிருந்தான குறுகிய கால நன்மைகளின் மீது அளவுக்கதிகமாக தங்கியிருப்பது உற்பத்தியாக்க மூலவளங்களின் தவறான ஒதுக்கீட்டினை ஏற்படுத்தும். ஏற்கனவே, வழங்கப்பட்ட முன்னுரிமைகளை குறைத்தல் அல்லது இறக்குமதித் தீர்வை மற்றும் சுங்கவரி சலுகைகளை மீளப்பெறுதல் போன்ற சந்தர்ப்பத்தில் மொத்த வள ஒதுக்கீடு உற்பத்தித் திறனற்றதாக இருக்கும்.

ஆகவே, சந்தைத் தொழிற்பாட்டளர்களினால் தயாரிக்கப்படும் முன்னேற்றகரமான உபாயம், கடல் கடந்த சந்தைகளில் போட்டித்தன்மையினையும் அவற்றை விரிவாக்குவதன் வலுவான தன்மையினையும் பேணுவதற்கு, அதிகரித்தளவில் முக்கியத்துவம் கொண்டதாக மாறி வருகின்ற அதேவேளையில், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் குறுங்கால சலுவைகளினால் கிடைக்கச் செய்யப்பட்ட வெளிநாட்டுச் சந்தைகளின் இலாபங்களையும் திரட்சிப்படுத்துகின்றது. முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளில் பங்குபற்றுவதனூடாகப் பெற்றுக் கொண்ட அனுபவங்களை நீண்டகால உபாயங்களினூடாக சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மீதும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் போன்ற பரஸ்பரம் விட்டுக் கொடுப்பற்ற உடன்படிக்கையிலும் தொடர்ச்சியாக தங்கியிராது அச்சுறுத்தல் கொண்ட போட்டிச் சந்தைகளைக் கருத்திற் கொண்டு உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மை கொண்ட நிறுவனமாக மாறுவதற்கு பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

நாட்டினுடைய வெளிநாட்டு வர்த்தகத்தின் எதிர்காலமானது எப்பொழுதும் ஒப்பீட்டு ரீதியான அநுகூலத்தில் தங்கியிருப்பதோடு, சமீப காலமாக பேசப்படுகின்ற போட்டி ரீதியான அநுகூலத்திலும் தங்கியிருக்கும். தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பெரிதும் முக்கியத்துவப்படும் இந்த நவீன உலகில், போட்டி ரீதியான அநுகூலம் வெளிநாட்டு வர்த்தகத்தின் விரிவாக்கத்தை நிர்ணயிக்கும் பிரதான காரணியாக மாறியுள்ளது. உலகின் ஏனைய பாகங்களிலுள்ள போட்டி உற்பத்தியாளர்களோடு வெற்றிகரமாக போட்டியிடுவதற்கு உள்நாட்டு உற்பத்திகளின் வினைத்திறனான உற்பத்தியம் உற்பத்தித் திறனும் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதையே இது வேண்டி நிற்கிறது.

சுத்திகரிப்பு விரிவாக்கம், கரையோர கப்பற்படுத்தலின் ஒத்துழைப்பு, சுங்க ஒத்துழைப்பு தொடர்பான உடன்பாடு மற்றும் பெற்றோலிய கொள்வனவுகளுக்காக வட்டியற்ற நியதிகளில் கடன் (நான்கு மாதங்கள்) என்பன தொடர்பாக பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படுவதற்கு வழிவகுத்தன. இரு நாடுகளுக்குமிடையில் சுற்றுலாவினை மேம்படுத்தவும் உடன்பாடு காணப்பட்டது.

**மட்டுப்படுத்தப்பட்ட உள்நாட்டுக் கேள்வியைக் கொண்ட ஒரு சிறிய நாடாக இருப்பதனால், குறைந்தளவு உற்பத்தியானது, இலங்கையின் போட்டியாளர்களின் உற்பத்திச் செலவுடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கு உயர்ந்த உற்பத்திச் செலவை தோற்றுவித்திருக்கிறது.** ஆகவே தேயிலையைப் போன்று, பன்னாட்டுச் சந்தைகளில் உச்ச நன்மைகளைப் பெறுவதற்கு தரங்களின் நியதிகளில் தமது உற்பத்திகளை வேறுபடுத்திக் காட்டும் உபாயங்களை ஏற்றுமதியாளர்கள் பின்பற்றுதல் வேண்டும். பெறுமதி கூட்டல்களைத் தேவைப்படுத்தும் அத்தகைய வேறுபடுத்தல்கள் இலங்கையின் வணிக அடையாளங்களுடனான பொருட்களை உருவாக்குவதற்கான செயற்பாட்டினை தூண்டும். 2007இல் தொடர்ச்சியான நிரம்பல் பிரச்சனைகள் விலைகளை உயர்த்திய போதும், இலங்கையின் தேயிலை பன்னாட்டுச் சந்தையில் உயர் விலைகளைப் பெறக்கூடியனவாக இருந்தன. எனினும், பன்னாட்டுச் சந்தையில் சிறந்த தகுதியொன்றினை நிலை நிறுத்திக் கொள்வதற்கு வசதியளிப்பதற்காக தேயிலை

**அட்டவணை 5.3**

**வர்த்தகச் சுட்டெண்கள் (அ)**

1997=100

| வகை | 2006 பெறுமதிச் சுட்டெண் | 2006 அளவுச் சுட்டெண் | 2006 அலகு ஒன்றிற்கான விலைச்சுட்டெண் | 2007 (ஆ) பெறுமதிச் சுட்டெண் | 2007 (ஆ) அளவுச் சுட்டெண் | 2007 (ஆ) அலகு ஒன்றிற்கான விலைச்சுட்டெண் | வளர்ச்சி வீதம் (ஆ) பெறுமதிச் சுட்டெண் | வளர்ச்சி வீதம் (ஆ) அளவுச் சுட்டெண் | வளர்ச்சி வீதம் (ஆ) அலகு ஒன்றிற்கான விலைச்சுட்டெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | 121.7 | 122.3 | 99.5 | 141.9 | 125.9 | 112.7 | 16.6 | 2.9 | 13.3 |
| தேயிலை | 122.2 | 124.0 | 98.6 | 142.2 | 122.1 | 116.5 | 16.3 | -1.5 | 18.2 |
| இறப்பர் | 118.4 | 77.0 | 153.8 | 139.0 | 85.8 | 162.1 | 17.5 | 11.5 | 5.4 |
| தெங்கு | 105.3 | 112.4 | 93.7 | 120.0 | 124.1 | 96.7 | 14.0 | 10.4 | 3.2 |
| ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகள் | 134.2 | 146.8 | 91.4 | 159.7 | 167.9 | 95.1 | 19.0 | 14.4 | 4.1 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | 156.1 | 150.3 | 104.0 | 172.0 | 163.0 | 105.5 | 10.0 | 8.4 | 1.4 |
| புடவைகளும் ஆடைகளும் | 135.2 | 141.2 | 95.7 | 146.6 | 150.8 | 97.2 | 8.5 | 6.8 | 1.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 193.5 | 64.9 | 298.3 | 173.5 | 57.5 | 301.7 | -10.4 | -11.4 | 1.1 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 199.9 | 177.6 | 111.7 | 226.0 | 198.6 | 113.8 | 13.0 | 11.8 | 1.9 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | 134.2 | 120.7 | 126.5 | 144.6 | 132.7 | 109.0 | 7.7 | 10.0 | -13.9 |
| இரத்தினக்கற்கள் | 124.3 | 119.9 | 120.2 | 128.6 | 126.3 | 101.8 | 3.5 | 5.3 | -15.3 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 264.8 | 130.3 | 203.2 | 354.3 | 216.6 | 163.6 | 33.8 | 66.2 | -19.5 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | 148.1 | 143.3 | 103.3 | 166.5 | 153.8 | 108.3 | 12.5 | 7.3 | 4.8 |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | 164.4 | 175.9 | 93.5 | 163.1 | 167.2 | 97.6 | -0.8 | -4.9 | 4.4 |
| உணவும் குடிபானங்களும் | 118.0 | 108.7 | 108.5 | 129.4 | 116.8 | 110.8 | 9.7 | 7.5 | 2.1 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 231.8 | 273.5 | 84.8 | 212.1 | 240.4 | 88.2 | -8.5 | -12.1 | 4.1 |
| **இடைநிலைப் பொருட்கள்** | 190.4 | 146.2 | 130.2 | 208.5 | 147.5 | 141.4 | 9.5 | 0.8 | 8.6 |
| வளமாக்கி | 247.1 | 162.1 | 152.5 | 290.0 | 145.8 | 199.0 | 17.3 | -10.1 | 30.5 |
| மசகெண்ணெய் | 389.7 | 118.7 | 328.4 | 388.1 | 106.7 | 363.7 | -0.4 | -10.1 | 10.7 |
| ஏனைய பெற்றோலியம் | 378.0 | 143.5 | 263.5 | 534.5 | 187.4 | 285.2 | 41.4 | 30.6 | 8.3 |
| இரசாயனக்கூறுகளும் கலவைகளும் | 191.8 | 144.2 | 133.0 | 206.9 | 154.4 | 134.0 | 7.9 | 7.1 | 0.7 |
| கோதுமையும் மெசுலீனும் | 144.1 | 152.1 | 94.8 | 169.8 | 120.6 | 140.7 | 17.8 | -20.7 | 48.5 |
| புடவைகள் (ஆடைகள் உட்பட) | 111.5 | 133.7 | 83.4 | 117.7 | 138.7 | 84.8 | 5.6 | 3.7 | 1.7 |
| பிளாத்திக்குகள் | 225.4 | 172.3 | 130.8 | 249.9 | 184.5 | 135.4 | 10.8 | 7.1 | 3.5 |
| வைரங்கள் | 193.2 | 116.6 | 165.8 | 172.6 | 103.4 | 167.0 | -10.7 | -11.3 | 0.7 |
| ஏனையவை | 205.0 | 202.7 | 101.1 | 197.4 | 195.9 | 100.8 | -3.7 | -3.3 | -0.4 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | 169.3 | 195.0 | 86.8 | 202.5 | 227.6 | 89.0 | 19.6 | 16.7 | 2.5 |
| கட்டடப்பொருட்கள் | 201.0 | 197.3 | 101.9 | 287.2 | 259.9 | 110.5 | 42.8 | 31.7 | 8.5 |
| போக்குவரத்துக் கருவிகள் | 175.2 | 101.3 | 173.0 | 175.2 | 100.9 | 173.6 | 0.0 | -0.3 | 0.3 |
| பொறியும் கருவியும் | 143.3 | 230.3 | 62.2 | 167.7 | 259.6 | 64.6 | 17.0 | 12.7 | 3.8 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 261.8 | 123.4 | 212.3 | 285.2 | 166.6 | 171.2 | 8.9 | 35.0 | -19.3 |
| **மொத்த இறக்குமதிகள்** | 174.8 | 163.4 | 107.0 | 192.7 | 170.1 | 113.3 | 10.2 | 4.1 | 5.9 |
| வர்த்தக மாற்று விகிதம் | | | 96.6 | | | 95.6 | | | -1.0 |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்

(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

மற்றும் அதேபோன்று ஏனைய உற்பத்திகளை உறுதிப்படுத்தி வேறுபட்ட பன்னாட்டு நியமங்களுக்கு ஒத்திசைவான முறையில் சான்றுபடுத்தல் வேண்டும். பன்னாட்டுச் சந்தையிலுள்ள தனிச் சிறப்பான இடத்தினை உருவாக்குவதற்கான அதன் முயற்சியில் ஆடைக் கைத்தொழில், கிராமிய தொழில் வாய்ப்புகளையும் மகளிர் வலுவூட்டலையும் வழங்குகின்ற, சிறுவரைத் தொழிலுக்கமர்த்தாத விழுமியம் மிக்க தயாரிப்புத் தரங்களின் அடிப்படையிலமைந்த "குற்றமற்ற ஆடைகள்" என்ற பிரச்சாரத்தினை உபாய ரீதியில் முன்னெடுத்தது. வரலாற்றுக் காலம் தொட்டே இலங்கையின் பலம் உண்மையான கறுவா, இலங்கை மாணிக்கம், இலங்கைத் தேயிலை, உயர்ந்த தர உலர்த்திய தேங்காய் மற்றும் மட்பாண்ட உற்பத்திகள் போன்ற அதன் தரமான உற்பத்திகளுடன் இரண்டறக் கலந்திருந்தது. வர்த்தக உடன்படிக்கைகள் ஏற்றுமதியாளர்கள் தீர்வையின்றி அல்லது முன்னுரிமை தீர்வை வீதங்களில் ஏற்றுமதிப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்களை வழங்கியது. எனினும், மற்றைய நாடுகளுடன் வர்த்தக ஒழுங்குகளைப் பின்பற்றும் வர்த்தகப் பங்காளர்களும் கூட, தீர்வை முன்னுரிமைகளை வழங்குகின்ற அதேவேளையில் உலக வர்த்தக அமைப்பின் கடப்பாடுகளுடன் தொடர்பான தீர்வைமட்ட வரையறைகளைக் குறைக்கின்ற தன்மையினையும் அவதானிக்க முடிந்தது. ஆகவே, நன்மைகளும் முன்னுரிமைகளும் படிப்படியாகக் குறைந்து போவதற்கு முன்னர், முன்னுரிமைச் சந்தைகளில், சந்தைகளையும் உற்பத்திகளையும் விரிவாக்கி, தரமான உற்பத்திகளினூடாக அந்தஸ்தினை வலுப்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாததாகும்.


**அரசாங்கம் பல்வேறு வடிவங்களிலான உதவிகளின் மூலமாக வர்த்தகத்திற்கு தொடர்ந்தும் வசதியளித்து வருகின்றது.** முதலீட்டுச் சபை முதலீட்டாளர்களுக்கான மத்திய வசதியளிப்பு நிலையமாக தொடர்ந்தும் தொழிற்பட்டு வருகின்றது. வியாபார - சிநேக பூர்வ ஒழுங்குவிதிகள் மற்றும் முழு வரி விடுப்பு (3 இலிருந்து 15 ஆண்டுகள்) சலுகை வரி வீதங்கள் (வரி விடுப்பிற்கு பின்னர்) செலாவணிக் கட்டுப்பாட்டிலிருந்தான விலக்கல்கள், மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களின் இறக்குமதிக்கான தீர்வையற்ற சலுகைகள் மற்றும் மூலதனம், பங்கிலாபங்களை தாய் நாட்டிற்கு அனுப்பும் வசதி போன்ற கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்கள் என்பனவற்றின் காரணமாக ஏற்றுமதி பதனிடல் வலையங்களில் பெரும் எண்ணிக்கையானவை ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் அண்மைய மொத்த ஏற்றுமதிகளில் 65 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகை கூறின. வெளிநாட்டு வர்த்தகத்திற்கு வசதியளிப்பதில் ஈடுபட்டுள்ள ஏனைய முக்கிய நிறுவனங்களாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் என்பன காணப்படுகின்றன.

## 5.3 பொருட்களிலான வர்த்தகம், வர்த்தக நிலுவை மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

### ஏற்றுமதிச் செயலாற்றம்

**சில முக்கிய ஏற்றுமதி வகைகள் தொடர்பான அளவுகளும் அதேபோன்று விலைகளும் அதிகரித்தமையின் காரணமாக 2007இல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மேலும் அதிகரித்தன.** பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட தீவிரமான போட்டியினை எதிர்கொள்ள ஏற்றுமதியாளர்கள் முயற்சிகளை எடுத்தமை, இலங்கைக்கும் அதன் வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையிலான வர்த்தக ஒழுங்குகள், அதேபோன்று 2007ஆம் ஆண்டின் பெரும்பகுதி முழுவதும் பொருளாதார வளர்ச்சி நியதிகளில் ஏற்றுமதி நாடுகளின் சாதகமான செயலாற்றம் என்பன கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் உயர்வடைய உதவின. அதேவேளை, பன்னாட்டுச் சந்தையில் பெற்றோலியத்தின் விலைகள் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு உயர்வடைந்தமையானது, இலங்கையின் வேளாண்மை பண்டங்களின் ஏற்றுமதிக்கான கேள்வியை உயர்வடையச் செய்தமையின் மூலம் அத்தகைய ஏற்றுமதிகளின் மீது மறைமுகமாக சாதகமான தாக்கத்தை தோற்றுவித்தது. இதன் விளைவாக, 2007இல் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 7,740 மில்லியனாக விளங்கியதுடன் இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.5 சதவீதமான வரவேற்கத்தக்கதொரு அதிகரிப்பாகக் காணப்பட்டது.

வரைபடம் 5.3 பண்டங்களின்படி ஏற்றுமதிகள்



## அட்டவணை 5.4 ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு

| வகை | 2006 பெறுமதி ஐ.அ.டொ மில் | 2006 பங்கு % | 2007(அ) பெறுமதி ஐ.அ.டொ மில் | 2007(அ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் (அ) ஐ.அ.டொ மில் | வளர்ச்சி வீதம் (அ) % | வளர்ச்சிக்கான பங்களிப்பு (அ) % |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | 1,292.7 | 18.8 | 1,507.2 | 19.5 | 214.5 | 16.6 | 25.0 |
| தேயிலை | 881.2 | 12.8 | 1,025.2 | 13.2 | 143.9 | 16.3 | 16.8 |
| இறப்பர் | 93.1 | 1.4 | 109.4 | 1.4 | 16.3 | 17.5 | 1.9 |
| தெங்கு | 123.9 | 1.8 | 141.2 | 1.8 | 17.3 | 14.0 | 2.0 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 52.8 | 0.8 | 60.3 | 0.8 | 7.5 | 14.1 | 0.9 |
| ஏனையவை | 71.0 | 1.0 | 80.9 | 1.0 | 9.9 | 13.9 | 1.1 |
| ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 194.6 | 2.8 | 231.5 | 3.0 | 37.0 | 19.0 | 4.3 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | 5,401.1 | 78.5 | 5,920.5 | 76.5 | 519.3 | 9.6 | 60.5 |
| உணவு, குடிபானங்கள், புகையிலை | 363.9 | 5.3 | 513.5 | 6.6 | 149.6 | 41.1 | 17.4 |
| புடவைகளும் ஆடைகளும் | 3,080.4 | 44.8 | 3,341.7 | 43.2 | 261.3 | 8.5 | 30.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 188.4 | 2.7 | 168.9 | 2.2 | -19.5 | -10.4 | -2.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 427.5 | 6.2 | 481.5 | 6.2 | 54.0 | 12.6 | 6.3 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 47.4 | 0.7 | 47.1 | 0.6 | -0.3 | -0.7 | 0.0 |
| தோல், பயணப்பொருடகளும் காலணியும் | 40.6 | 0.6 | 23.9 | 0.3 | -16.7 | -41.2 | -2.0 |
| பொறியும் கருவியும் | 394.3 | 5.7 | 542.2 | 7.0 | 147.9 | 37.5 | 17.2 |
| வைரம் மற்றும் ஆபரணம் | 327.0 | 4.8 | 368.0 | 4.8 | 41.0 | 12.5 | 4.8 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 531.7 | 7.7 | 433.9 | 5.6 | -97.8 | -18.4 | -11.4 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | 119.9 | 1.7 | 129.2 | 1.7 | 9.2 | 7.7 | 1.1 |
| இரத்தினக்கற்கள் | 103.2 | 1.5 | 106.8 | 1.4 | 3.6 | 3.5 | 0.4 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 16.7 | 0.2 | 22.4 | 0.3 | 5.6 | 33.8 | 0.7 |
| **பாகுபடுத்தப்படாதவை (ஆ)** | 68.9 | 1.0 | 183.6 | 2.4 | 114.6 | 166.2 | 13.4 |
| **மொத்த ஏற்றுமதிகள் (இ)** | 6,882.7 | 100.0 | 7,740.5 | 100.0 | 857.7 | 12.5 | 100.0 |
| ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் | 103.96 | | 110.62 | | | | |


(அ) தற்காலிகமானவை
(ஆ) மீள் ஏற்றுமதிகள் உட்பட
(இ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை

**2007இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் 10.0 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு ஆடைகள் மற்றும் புடவைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே பாரியளவிற்கு உதவி புரிந்தது.** ஆடைகள் மற்றும் புடைவைகளின் ஏற்றுமதிகள், இலங்கைக்கான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் பாரிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கின. ஆடைகள் மற்றும் புடைவைகளின் ஏற்றுமதிகளின் அதிகரிப்பில் பெரும் பகுதிக்கு முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் தொடர்பாக, அதனால் பெறப்பட்ட சலுகைகளே காரணமாக இருந்தன. 2007இல் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகளின் பங்கு 2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளுக்கான முறையே 36 சதவீதம் மற்றும் 40 சதவீதங்களிலிருந்து 45 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்தது. இவ்வாறிருப்பினும், இலங்கை ஆடை ஏற்றுமதிகளுக்கான தனிப் பெரும் சந்தையாக ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் விளங்கி, ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாள 50 சதவீதத்திற்கு வகை கூறியது. ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களிடையே, ஐக்கிய இராச்சியம் இலங்கை ஆடை ஏற்றுமதிகளுக்கான பாரிய சந்தையாக விளங்கி 2007இன் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 25 சதவீதத்திற்கு வகை கூறியது. இதனைத் தொடர்ந்து இத்தாலியும் ஜேர்மனியும் முறையே 9 சதவீதத்திற்கும் 5 சதவீதத்திற்கும் வகை கூறின. இப்புள்ளிவிபரங்கள் ஆடை ஏற்றுமதிகளுக்கான சந்தைகள் பெருமளவிற்கு குவிந்திருக்கின்றமையினை தெளிவாக எடுத்துக் காட்டியதுடன் நாட்டின் ஏற்றுமதிச் செயலாற்றம் ஒரு சில கைத்தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளில் அபிவிருத்திகளின் மாற்றமுறும் தன்மைக்குட்பட்டதாக இருக்கிறது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் ஏனைய துணை வகைகளைப் பொறுத்த வரையில் உணவு, குடிபானம், புகையிலை, இறப்பர் உற்பத்திகள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறிகள் மற்றும் கருவிகள் என்பன குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தவற்றிடையே காணப்பட்டன.

**2007ஆம் ஆண்டு, தேயிலைக்குச் சாதகமான இன்னொரு ஆண்டாக விளங்கி, வேளாண்மைப் பண்டங்களின் ஏற்றுமதி வருவாய்களில் பெரும் மூலத்தை கொண்டிருந்தது.** இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளின் வரலாற்றில் முதற் தடவையாக 2007இல் வருவாய்கள் ஐ.அ.டொலர் 1.0 பில்லியன் அடிப்படை அளவினைக் கடந்து காணப்பட்டன. தேயிலை ஏற்றுமதிகளின் வருவாய்கள் இரண்டு மடங்காவதற்கு ஏறத்தாழ

வரைபடம் 5.4 பண்டங்களின்படி இறக்குமதிகள்




17 ஆண்டுகள் எடுத்திருக்கிறது. கூலி அதிகரிப்புக்களுக்கான தொழிற்சங்க நடவடிக்கைகள், வரட்சி மற்றும் வளமாக்கி விலைகளில் ஏற்பட்ட கடுமையான உயர்வு என்பனவற்றின் காரணமாக தாமதமடைந்த வளமாக்கிப் பயன்பாடு என்பனவற்றின் விளைவாக உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, மத்திய கிழக்கு மற்றும் சுதந்திர அரசுகளின் பொது நலவாய நாடுகளிலிருந்து, குறிப்பாக, தாழ் நிலத் தேயிலைக்கு ஏற்பட்ட வலுவான கேள்வி என்பன இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் சராசரி விலைகளை மேலும் உயர்த்தின. இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கான பாரிய சந்தைகளை உள்ளடக்கியுள்ள மத்திய கிழக்கு மற்றும் சுதந்திர அரசுகளின் பொது நலவாய நாடுகள் 2007இன் மொத்த தேயிலை ஏற்றுமதிகளில் முறையே ஏறத்தாள 24 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் வகை கூறின. இலங்கைத் தேயிலையின் தனிச் சிறப்பான தன்மையின் பொருட்டு எழுந்த அவர்களின் வலுவான கேள்விக்கு எண்ணெய் விலைகள் உயர்வடைந்தமைக்கு இணையாக அவர்களின் வருமானம் உயர்வடைந்தமையும் ஓரளவு காரணமாகும். தேயிலைத் துறையில் அதிகரித்துச் செல்லும் தொழிற்சங்க நடவடிக்கைகள், தேயிலை உற்பத்தி செய்கின்ற கம்பனிகளின் நீண்டகால ஆற்றல் தன்மையினையும் பன்னாட்டுச் சந்தைகளில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் போட்டித் தன்மையினையும் பாதிக்கும் என்பதனைக் கவனத்தில் கொள்ளும் போது இது கரிசனைக்குரியதொரு விடயமாக இருந்து வருகிறது. ஏனைய வேளாண்மைப் பண்டங்களின் ஏற்றுமதிகளைப் பொறுத்தவரையில், பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து செயற்கை இறப்பரின் விலைகள் அதிகரித்தமையின் விளைவாக, இயற்கை இறப்பரின் பன்னாட்டு விலைகளில் உயர்வடைந்த போக்கினைப் பிரதிபலிக்கும் விதத்தில் 2007இல் இறப்பர் ஏற்றுமதிகள் மேலும் அதிகரித்தன. 2007இல் தேங்காயின் ஏற்றுமதி விலைகளும் அதிகரித்தன. இதற்கு பன்னாட்டு ரீதியாக தேங்காயெண்ணெய் உயிரின எரிபொருளின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதும் காரணமாக இருக்கக்கூடும். எனினும், தேங்காயின் உள்நாட்டு விலைகள் கணிசமாக உயர்வடைந்தமையின் காரணமாக 2007இன் இறுதியில் தேங்காய் மற்றும் தேங்காய் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்டன. இது, 2007இல் தேங்காய் ஏற்றுமதிகள் வீழ்ச்சியடையக் காரணமாயிற்று.

## இறக்குமதிச் செயலாற்றம்

**நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் குறைவடைந்து காணப்பட்டமையின் முக்கிய விளைவாக 2007ஆம் ஆண்டின் பெரும் பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஒப்பீட்டு ரீதியில் மிதமான அதிகரிப்புக்களையே பதிவு செய்தன.** எனினும், 2007 இறுதியளவில், இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 10.2 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு, பெற்றோலியம், அதேபோன்று, முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஏற்பட்டமையே காரணமாகும். பெற்றோலியத்தின் பன்னாட்டு விலைகள் 2007இன் இறுதிப் பகுதியில் முன்னெப்பொழுதுமில்லாத மட்டங்களுக்கு உயர்வடைந்தமையின் விளைவாக, 2007இல் இறக்குமதிகள் மீதான செலவினத்தின் ஆண்டிற்காண்டு அதிகரிப்பில் 40 சதவீதத்திற்கு பெற்றோலிய இறக்குமதிகள் பங்களித்தன. இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெயின் மாதாந்த சராசரி விலை 2006 திசெம்பரில் பீப்பாய் ஒன்று ஐ.அ.டொலர் 59.85 இலிருந்து 2007 திசெம்பரில் பீப்பாய் ஒன்று ஐ.அ.டொலர் 90 இற்கு மேலாக அதிகரித்தது. 2007இல் இறக்குமதிச் செலவினத்தினை அதிகரித்த இடைநிலைப் பொருட்களிடையே வளமாக்கி, புடவைகள் மற்றும் துணிகள் மற்றும் இரசாயனங்கள் என்பன காணப்பட்டன.

**2007இல் இலங்கையின் இறக்குமதிகள் தொடர்பான சாதகமான அபிவிருத்தியாதெனில் முதலீட்டுப் பொருட்கள் மீதான ஒன்று சேர்ந்த செலவினத்தில் காணப்பட்ட 19.6 சதவீத வளர்ச்சியாகும். இது எதிர்கால பொருளாதார நடவடிக்கைகளுக்கு கட்டியம் கூறுவதாகவுள்ளது.** முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் விரிவடைந்தமைக்கு சிறப்பாக கட்டுமானம், தொலை தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் அரசாங்கத்தினாலும் தனியார் துறையினாலும் மேற்கொள்ளப்பட்ட விரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் பக்க பலமாக விளங்கின. முதலீட்டுப் பொருட்கள் மீதான செலவினத்தின் விரிவு வலுவானதாகவும்

**அட்டவணை 5.5** **இறக்குமதிகளின் உள்ளமைப்பு**

| வகை | 2006 பெறுமதி ஐ.அ.டொ மில் | 2006 பங்கு % | 2007 (அ) பெறுமதி ஐ.அ.டொ மில் | 2007 (அ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் (அ) ஐ.அ.டொ மில் | வளர்ச்சி வீதம் (அ) % | வளர்ச்சிக்கான பங்களிப்பு (அ)% |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப்பொருட்கள்** | 1,980.2 | 19.3 | 2,001.8 | 17.7 | 21.6 | 1.1 | 2.1 |
| உணவும் குடிபானங்கள் | 956.0 | 9.3 | 1,064.8 | 9.4 | 108.8 | 11.4 | 10.4 |
| அரிசி | 5.5 | 0.1 | 38.7 | 0.3 | 33.2 | 599.9 | 3.2 |
| சீனி | 223.7 | 2.2 | 154.1 | 1.4 | -69.6 | -31.1 | -6.6 |
| கோதுமை | 198.6 | 1.9 | 233.9 | 2.1 | 35.3 | 17.8 | 3.4 |
| ஏனையவை | 528.2 | 5.2 | 638.0 | 5.6 | 109.8 | -12.4 | 10.5 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 1,024.2 | 10.0 | 937.1 | 8.3 | -87.1 | -8.5 | -8.3 |
| **இடைநிலைப் பொருட்கள்** | 5,962.4 | 58.1 | 6,513.4 | 57.6 | 551.0 | 9.2 | 52.6 |
| பெற்றோலியம் | 2,070.3 | 20.2 | 2,496.8 | 22.1 | 426.4 | 20.6 | 40.7 |
| வளமாக்கி | 164.1 | 1.6 | 192.5 | 1.7 | 28.5 | 17.3 | 2.7 |
| இரசாயனங்கள் | 260.8 | 2.5 | 281.4 | 2.5 | 20.6 | 7.9 | 2.0 |
| ஆடைகளும் புடவைகளும் | 1,546.2 | 15.1 | 1,632.2 | 14.4 | 86.0 | 5.6 | 8.2 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,921.0 | 18.7 | 1,910.5 | 16.9 | -10.5 | -0.5 | -1.0 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | 2,245.7 | 21.9 | 2,685.2 | 23.8 | 439.5 | 19.6 | 42.0 |
| பொறியும் கருவியும் | 1,065.4 | 10.5 | 1,246.7 | 11.0 | 181.3 | 17.0 | 17.3 |
| போக்குவரத்துக் கருவி | 364.5 | 3.6 | 364.5 | 3.2 | 0.0 | 0.0 | 0.0 |
| கட்டடப் பொருட்கள் | 546.2 | 5.3 | 780.3 | 6.9 | 234.1 | 42.9 | 22.4 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 269.6 | 2.4 | 293.6 | 2.6 | 24.1 | 8.9 | 2.3 |
| **பகுக்கப்படாத இறக்குமதிகள்** | 65.4 | 0.6 | 100.2 | 0.9 | 34.8 | 53.2 | 3.3 |
| **மொத்த இறக்குமதிகள் (ஆ)** | 10,253.7 | 100.0 | 11,300.5 | 100 | 1,046.8 | 10.2 | 100.0 |
| ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் | 103.96 | | 110.62 | | | | |

(அ) தற்காலிகமானவை
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மத்திய வங்கி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

இனிவரும் ஆண்டுகளில் இறக்குமதிச் செயலாற்றத்தின் பெறுபேறுகளைத் தீர்மானிக்கும் காரணியாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**2007இல் நுகர்வுப் பொருட்களின் மீதான செலவினத்தின் வளர்ச்சிக்கு உணவு மற்றும் குடிபான வகையே முழுக் காரணமாகும்.** நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினத்தில் 50 சதவீதமானவற்றிற்கும் கூடுதலான அளவைக் கொண்டுள்ள உணவு மற்றும் குடிபானங்கள் 11.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2007இல் பல முக்கிய உணவு வகைகளின் உயர்ந்த பன்னாட்டு விலைகளே முக்கிய காரணமாகும். பன்னாட்டு பண்டச் சந்தைகளில் காணப்பட்ட உயர்ந்த விலைகளுக்கு, வானிலையுடன் தொடர்பான பின்னடைவுகள், முக்கிய உற்பத்தி நாடுகளின் மோசமான அறுவடை மற்றும் இருப்புக்கள், தோற்றம் பெற்று வரும் பல்வேறு நாடுகளினதும் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட உயர்வு என்பனவே தூண்டுதலாக அமைந்தன. இறக்குமதிகளின் அளவு வீழ்ச்சியடைந்துள்ளமையினால், கோதுமை மீதான செலவினம் அதிகரித்தமைக்கு கோதுமையின் உயர்ந்த விலைகளே முழுக் காரணமாகும். அதேவேளை, உள்நாட்டுச் சந்தையில் அரிசி விலை உயர்வதைத் தடுக்கும் தற்காலிக வழிமுறையாக 2007 ஒத்தோபர் நடுப் பகுதியிலிருந்து திசெம்பர் இறுதிவரை அரிசி இறக்குமதி தொடர்பாக வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்களின் காரணமாக 2007இல் அரிசி இறக்குமதிகள் கடுமையான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. நீண்டகால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியினைப் பொறுத்தவரையில் உந்து ஊர்திகள் மற்றும் ஈருருளிகள் மீதான செலவினத்தில் வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டது. இதற்கு 2007இல் உந்து ஊர்திகளின் இறக்குமதிகளுக்கு ஏற்புடையதான தீர்வை வீதங்கள் உயர்ந்தளவில் காணப்பட்டமையே காரணமாகும்.

**இறக்குமதிகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி உயர்வாக இருந்தமை 2007இல் வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்த உதவியது.** வர்த்தகப் பற்றாக்குறையானது 2006இன் விரிவாக்கமான 34.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2007இல் 5.6 சதவீதத்தினால் மிதமாக விரிவடைந்தது. திரண்ட வர்த்தகப் பற்றாக்குறை 2006இன் ஐ.அ.டொலர் 3,371 மில்லியனிலிருந்து 2007இல் ஐ.அ.டொலர் 3,560 மில்லியனுக்கு விரிவடைந்தது.

**2007இல் வர்த்தக மாற்று விகிதம் மேலுமொரு மோசமான ஆண்டினைக் காட்டியது.** இருப்பினும், வேளாண்மை உற்பத்திகளுக்கு கிடைத்த சாதகமான விலைகள் அத்தகைய மோசமான தாக்கத்தினைக் குறைத்தன. எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட திடீர் உயர்வு, உலக உணவுச் சந்தையில் காணப்பட்ட நிரம்பலின் இறுக்கமான தன்மையுடன் இணைந்து, இலங்கையின் முதன்மையான வேளாண்மை உற்பத்திகளின் மீது மறைமுகமான சாதகமான தாக்கத்தினைக்

**அட்டவணை 5.6 முக்கிய இறக்குமதிகளின் அளவு (அ)**

'000 மெற்றிக்தொன்

| விடயம் | 2003 | 2004 | 2005 | 2006 (ஆ) | 2006 (இ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | 35 | 222 | 52 | 12 | 88 |
| 1ஆம் காலாண்டு | 22 | 9 | 43 | 3 | 4 |
| 2ஆம் காலாண்டு | 9 | 9 | 4 | 2 | 7 |
| 3ஆம் காலாண்டு | 2 | 4 | 2 | 3 | 3 |
| 4ஆம் காலாண்டு | 2 | 200 | 3 | 4 | 74 |
| **கோதுமை** | 919 | 993 | 864 | 1,200 | 952 |
| 1ஆம் காலாண்டு | 262 | 257 | 272 | 287 | 204 |
| 2ஆம் காலாண்டு | 232 | 218 | 191 | 321 | 388 |
| 3ஆம் காலாண்டு | 217 | 189 | 174 | 331 | 274 |
| 4ஆம் காலாண்டு | 208 | 329 | 227 | 261 | 87 |
| **சீனி** | 509 | 438 | 418 | 525 | 481 |
| 1ஆம் காலாண்டு | 151 | 98 | 49 | 112 | 112 |
| 2ஆம் காலாண்டு | 135 | 173 | 167 | 137 | 138 |
| 3ஆம் காலாண்டு | 104 | 71 | 94 | 127 | 118 |
| 4ஆம் காலாண்டு | 119 | 96 | 108 | 149 | 113 |
| **பெற்றோலியம் (மசகெண்ணெய்)** | 1,995 | 2,200 | 2,008 | 2,151 | 1,938 |
| 1ஆம் காலாண்டு | 382 | 586 | 586 | 592 | 272 |
| 2ஆம் காலாண்டு | 466 | 464 | 581 | 535 | 557 |
| 3ஆம் காலாண்டு | 500 | 634 | 246 | 582 | 559 |
| 4ஆம் காலாண்டு | 647 | 516 | 595 | 442 | 550 |
| **தூய்மையாக்கப்பட்ட பெற்றோலியம்** | 1,168 | 1,645 | 1,823 | 1,763 | 2,297 |
| 1ஆம் காலாண்டு | 340 | 460 | 314 | 402 | 489 |
| 2ஆம் காலாண்டு | 239 | 380 | 396 | 468 | 527 |
| 3ஆம் காலாண்டு | 317 | 341 | 711 | 334 | 736 |
| 4ஆம் காலாண்டு | 272 | 464 | 402 | 559 | 545 |
| **வளமாக்கி** | 514 | 510 | 529 | 633 | 569 |
| 1ஆம் காலாண்டு | 124 | 54 | 168 | 166 | 62 |
| 2ஆம் காலாண்டு | 166 | 164 | 111 | 203 | 171 |
| 3ஆம் காலாண்டு | 49 | 76 | 142 | 119 | 132 |
| 4ஆம் காலாண்டு | 175 | 216 | 107 | 146 | 205 |


(அ) சீராக்கப்பட்டது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை


கொண்டிருந்தது. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் மாதாந்த சராசரி விலைகள் 2007 திசெம்பரில் கிலோ கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 3.78 கொண்ட மிக உயர்ந்த மட்டத்தினைப் பதிவு செய்திருக்கிறது. 2007இல் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் சராசரி விலை 2006ஆம் ஆண்டின் சராசரி விலையான கி.கிறாம் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 2.69 உடன் ஒப்பிடுகையில் 2007இல் கி.கிறாமொன்று ஐ.அ.டொலர் 3.28 ஆகக் காணப்பட்டது. இதேபோன்று, இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலைகள் 2006இன் சராசரி விலையான கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 1.99 உடன் ஒப்பிடுகையில் 2007இல் கி.கிறாம் ஒன்று ஐ.அ.டொலர் 2.13 இற்கு உயர்வடைந்து 2007 இறுதியில் மேலும் அதிகரித்தது. இதற்கு வரலாற்றிலேயே மிக உயர்ந்த எண்ணெய் விலைகளும் குறுங்கால வழங்கல் பற்றிய கரிசனைகளுமே தூண்டுதலாக அமைந்தன. சீனா மற்றும் ஏனைய நாடுகளிலிருந்தான ஏற்றுமதிகளில் ஏற்பட்ட உயர்வின் காரணமாக ஏற்பட்ட அழுத்தங்களை கவனத்திற் கொள்கையில் 2007இல் ஆடைகளின் விலைகள் குறைவடைந்து காணப்பட்டதுடன் அண்மைய எதிர்காலத்தில் எந்தவொரு சாதகமான அதிகரிப்பிற்குமான வாய்ப்புக்கள் குறைந்தளவே காணப்பட்டன. 2007இல் தேங்காய் மற்றும் கறுவா, மிளகு, கராம்பு மற்றும் புகையிலை போன்ற ஏனைய வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதி விலைகளும் உயர்வடைந்தன. இறக்குமதிகளைப் பொறுத்த வரையில் 2007ஆம் ஆண்டுப் பகுதியில் பன்னாட்டுச் சந்தைகளில் தானியங்களின் விலைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு வரட்சியினால் அவுத்திரேலியா போன்ற உற்பத்தி நாடுகளின் நிரம்பலில் ஏற்பட்ட பற்றாக்குறையே முக்கிய காரணமாக அமைந்தது. பாற்பண்ணை உற்பத்திகளின் பன்னாட்டு விலைகள் அதிகரித்தமைக்கு உயர்ந்த விலங்குணவுச் செலவுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்தான வலுவான இறக்குமதிக் கேள்வி மற்றும் இறுக்கமான நிரம்பல் என்பன காரணங்களாக அமைந்தன. 2007இல் கோதுமை, பால் உற்பத்தி ஆகிய இரண்டினதும் விலைகள் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மட்டத்தினை அடைந்தன. அதேபோன்று அரிசியின் விலைகளும் உயர்வடைந்து முக்கிய ஏற்றுமதி நாடுகளின் இறுக்கமான சந்தை நிலைமைகளைப் பிரதிபலித்தன. மேலே ஆராயப்பட்ட அபிவிருத்திகளுக்கு மாறாக, 2004இன் தொடக்கத்திலிருந்து படிப்படியாக ஆனால் குறிப்பிடத்தக்களவிற்கு ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து 2006இன் இறுதிக் காலாண்டில் ஓரளவிற்கு வீழ்ச்சியடைந்த சீனியில் பன்னாட்டு விலைகள் உற்பத்தியில் ஏற்பட்ட மிகைகளின் விளைவாக 2007இல் மேலும் வீழ்ச்சியடைந்தன.

**உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு, வானிலையுடன் தொடர்பான காரணிகள் தானியங்கள் மற்றும் பண்ணை உற்பத்திகள் மீது கொண்டிருக்கின்ற தாக்கம் குறுங்காலத்திலிருந்து நடுத்தரகாலம் வரையில் குறிப்பிடத்தக்களவிற்கு காணப்படுகின்ற வேளையில், விலை அதிகரிப்புக்களுக்குப் பங்களித்த மற்றைய காரணிகள் நீண்ட காலத்திற்கு குறிப்பிடத்தக்களவில் காணப்படும்.** இக்காரணிகளிடையே மக்காச் சோளம், சோளம் அதேபோன்று சீனி மற்றும் சமையல் எண்ணெய் போன்ற தானியங்கள் உயிரின எரிபொருள் உற்பத்திக்காக பயன்படுவது அதிகரித்து வருவதும் ஒரு காரணியாகக் காணப்படுகிறது. பன்னாட்டு உணவு விலைகள்

**வரைபடம் 5.5 வர்த்தக மாற்றுவீதம், ஏற்றுமதி, இறக்குமதிச் சுட்டெண்கள்: அளவும் அலகுப் பெறுமதியும்**



வரைபடம் 5.6 நாடுகளின்படி ஏற்றுமதிகள்





தொடர்பான இன்னொரு முக்கிய காரணி அபிவிருத்தி அடைந்து வருகின்ற மற்றும் தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களின் நுகர்விற்காக அதிகரிக்கின்ற கேள்வியாகும்.

**மேலே, கலந்துரையாடப்பட்ட அபிவிருத்திகளின் பெறுபேறாக 2007இல் ஏற்றுமதிகளின் விலைகள் 4.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் இறக்குமதி விலைகள் 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** 2007இல் வர்த்தக மாற்று விகிதம் 1.0 சதவீதத்தினால் சிறிதளவில் மோசமடைந்து ஏற்றுமதிகளின் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதியின் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணில் உயர்ந்த வளர்ச்சி காணப்பட்டமையினை பிரதிபலிக்கிறது.

## வர்த்தகத்தின் போக்கு

**இலங்கையின் ஏற்றுமதிச் சந்தைகளின் குவிவின் அளவு 2007இல் மேலும் வீழ்ச்சியடைந்ததெனினும் இலங்கையின் ஏற்றுமதிகளில் 50 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகை கூறும் ஒரு சில மேற்கு நாடுகளே இன்னமும் பாரிய சந்தைகளை உள்ளடக்கியுள்ளன.** அவற்றிடையே ஐக்கிய அமெரிக்கா (25 சதவீதம்), ஐக்கிய இராச்சியம் (13 சதவீதம்), ஜேர்மனி (6 சதவீதம்), இத்தாலி (5 சதவீதம்) ஆகியன புடவைகள், ஆடைகளுக்கான முக்கிய சந்தைகளாகக் காணப்பட பெல்ஜியம் (5 சதவீதம்) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் செய்முறைப்படுத்தப்பட்ட வைரத்திற்கான பாரிய சந்தையாகக் காணப்படுகிறது. 2000ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டமையினைத் தொடர்ந்து இந்தியா, இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான அதிகரித்து வரும் முக்கிய சந்தையாக மாறி 2007 இறுதியில் இலங்கையின் ஏற்றுமதிகளில் 7 சதவீதத்திற்கு வகை கூறியது. இந்தியாவிற்கான ஏற்றுமதிகளில் வனஸ்பதி என அழைக்கப்படும் மரக்கறி எண்ணெய் முக்கியமானதாக விளங்கியதுடன் 2007இல் இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகளில் ஏறத்தான 20 சதவீதத்திற்கு வகை கூறியது. 2007இல் தேயிலை ஏற்றுமதிகளுக்கான முக்கிய சந்தைகளான ரஷ்யா சியாவும், ஐக்கிய அரபு எமிறேட்ஸ்சும் மொத்த ஏற்றுமதிகளில் ஒவ்வொன்றும் முறையே ஏறத்தாழ 3 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் தேயிலைக்கான இன்னொரு முக்கிய சந்தையான ஈரான் மொத்த ஏற்றுமதிகளில் 1.5 சதவீதத்திற்கு வகை கூறியது. பிரான்ஸ், யப்பான் மற்றும் நெதர்லாந்து ஒவ்வொன்றும் 2007இல் இலங்கையின் ஏற்றுமதிகளில் ஏறத்தாள 2 சதவீதத்திற்கு வகை கூறிய வேளையில், மற்றைய நாடுகள் மொத்த ஏற்றுமதியில் 1 சதவீதத்திற்கு அல்லது அதற்கும் குறைவான பங்கிற்கு வகை கூறின.

வரைபடம் 5.7 நாடுகளின்படி இறக்குமதிகள்



**2007இல் இலங்கைக்கான இறக்குமதிகளின் முக்கியா மூலமாக இந்திய தொடர்ந்து இருந்த வேளையில் ஆசிய நாடுகள் இலங்கையின் இறக்குமதிகளில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தின.** 2007இல் இலங்கையின் மொத்த இறக்குமதிகளில் இந்தியாவின் பங்கு 23 சதவீதத்திற்கு மேலும் அதிகரித்தமைக்கு இலங்கை சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் அதேபோன்று சீனி, அரிசி, பெரிய வெங்காயம் மற்றும் சீமெந்து போன்ற பெரும் எண்ணிக்கையான பண்டங்களுக்குப் புறம்பாக உந்து ஊர்திகள் போன்ற பல நீண்ட கால நுகர்வுப்பொருட்களையும் இறக்குமதி செய்தமையே காரணமாகும். இலங்கையின் இறக்குமதிகளுக்கு மூலமாக விளங்கும் ஏனைய ஆசிய நாடுகளாக சிங்கப்பூர் (10 சதவீதம்), சீனா (8 சதவீதம்), ஈரான் (7.0 சதவீதம்), கொங்கொங் (6 சதவீதம்) யப்பான் (4 சதவீதம்), ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (3 சதவீதம்) மற்றும் மலேசியா (3 சதவீதம்) என்பன விளங்கின. 2007இல் ஐ. அமெரிக்கா இலங்கையின் இறக்குமதிகளில் 4 சதவீதத்திற்கு வகை கூறியது. 2007இன் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏறத்தாள 68 சதவீதத்திற்கு மேற்குறிப்பிட்ட நாடுகள் வகை கூறிய வேளையில் இலங்கை இறக்குமதியினை மேற்கொள்ளும் மற்றைய நாடுகள் இறக்குமதி மீதான மொத்தச் செலவில் 2 சதவீதம் அல்லது அதற்கும் குறைவான பங்கிற்கே வகை கூறின.

## 5.4 பணிகளிலான வர்த்தகம், வருமானம், மாற்றல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை

### போக்குவரத்துப் பணிகளிலான வர்த்தகம்

**2007இல் கப்பற்சரக்குக் கட்டணங்கள், துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் பயணிகள் கட்டணம் என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகளின் பேரிலான உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 840 மில்லியனுக்கு 11.9 சதவீதத்தினால் அதிகரித்தன.** இவ்வதிகரிப்பிற்கு முக்கியமாக, உயர்ந்தளவு சரக்கு கையாளலின் விளைவாக துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு, பறக்கும்சேரிடங்களில் ஏற்பட்ட விரிவு, சிறிலங்கன் எயார் லைனின் பறக்கும் மணித்தியாலங்கள் மற்றும் பறப்புக்களுக்கிடையிலான நேரம் மற்றும் தேசிய சிக்கன வானூர்தியான மிகின் லங்கா புதிதாக நிறுவப்பட்டமை என்பனவற்றின் காரணமாக பயணிகள் கட்டணங்களிலிருந்தான அதிகரித்த வருவாய் என்பன வழிவகுத்தன. பாதுகாப்பு கரிசனைகளின் காரணமாக இவ்வாண்டின் குறிப்பிட்ட சில காலங்களில் ஒரு சில வெளிநாட்டு வானூர்தி நிறுவனங்கள் தமது கிரமமான தொழிற்பாடுகளை இடை நிறுத்தியமையானது தேசிய வானூர்திகளில் கூடுதலான பயணிகள் பறப்பதற்கான மேலதிக வாய்ப்புக்களை உருவாக்கின. கொழும்புத்துறை முகத்தில் கையாளப்பட்ட கொள்கலன்களில், குறிப்பாக 10.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த கொள்கலன் மாற்றிக் கப்பலேற்றல் கையாளலில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சியினால் துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. கொள்கலன் மாற்றிக் கப்பலேற்றல் கையாளலில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு தொடர்ந்து காணப்படும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி, விரிவடைந்து வரும் இந்தியாவின் பன்னாட்டு வர்த்தகம் கொழும்புத் துறைமுகத்தினால் வழங்கப்படும் பணிகளின் மேம்பாடு என்பன காரணங்களாக இருக்க முடியும். துறைமுகத்துடன் தொடர்பான வளர்ச்சியினை தக்க வைப்பதற்கும், இப்பிராந்தியத்திலுள்ள போட்டித் துறைமுகங்களிலிருந்து வரும் எதிர்காலச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கும், மேலும் தாமதமின்றி கொழும்பு தெற்கு துறைமுக செயற்றிட்டம் போன்ற அடையாளம் காணப்பட்ட துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைக்கிடுவது இன்றியமையாததாகும். இச்செயற்றிட்டங்களை நடைமுறைக்கிடுவதில் காணப்படும் எந்தவொரு தாமதமும் செலவுகள் அதிகரிப்பதற்கு மட்டுமன்றி, வியாபாரங்கள் கொழும்புத் துறைமுகத்திலிருந்து இப்பிராந்தியத்திற்கான மற்றைய போட்டித் துறைமுகங்களுக்கு நகர்வதற்கும் வழிவகுக்குமாகையால் இது துறைமுகத்துடன் தொடர்பான பணிகளின் எதிர்கால வருவாயின் உள்ளார்ந்த தன்மையினையும் தடை செய்து விடும். அதேவேளை, போக்குவரத்தின் பேரிலான வெளிப்பாய்ச்சலானது இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி மற்றும் பொழுதுபோக்கு, தொழில்வாய்ப்பு, கல்வி மற்றும் உடல் நலக் கவனிப்பு போன்ற நோக்கங்களுக்காக இலங்கையர்களின் வெளிநாட்டுப் பயணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றுடன் இணைந்து செல்லும் விதத்தில் 10.6 சதவீதத்தினால் அதிகரித்தது. பல்வேறு வானூர்தி நிறுவனங்களினாலும் பல்வேறு பிராந்திய நாடுகளுக்குமாக வழங்கப்பட்ட போட்டி ரீதியான வான் பயண வசதிகளை கொண்ட பொதி வெளிச் செல்லும் பயணங்களின் அதிகரிப்பிற்கு பாரியளவில் உதவியது.

### பயணம் மற்றும் சுற்றுலா

**2007ஆம் ஆண்டுப் பகுதியில் சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சி வேகம் தொடர்ந்தும் மந்தமாகக் காணப்பட்டது. 2007இல் சுற்றுலா வருகைகள் 2006இல் பதிவு செய்யப்பட்ட 559,603 வருகைகளிலிருந்து 494,008 இற்கு 11.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன .** ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, அவுத்திரேலியா, இத்தாலி, ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிரான்சு உட்பட முக்கியமாக சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட நாடுகளினால் விடுக்கப்பட்ட பயண ஆலோசனைகள் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கின. இத்தகைய ஆலோசனைகள் நிச்சயமற்ற பாதுகாப்பு நிலைமைகளுடன் சேர்ந்து ஐக்கிய இராச்சியம், மாலை தீவு மற்றும் ருசியா தவிர்ந்த அனைத்து முக்கிய சந்தைகளிலுமிருந்தான வருகைகளில் வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. இதன்விளைவாக, சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2006இல் ஐ.அ.டொலர் 410 மில்லியனிலிருந்து

**அட்டவணை 5.7**

**தேறிய பணிகள், வருமானம் மற்றும் மாற்றல்கள் (அ)**

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் 2006 | ஐ.அ.டொலர் மில்லியன் 2007(ஆ) | ரூபா மில்லியன் 2006 | ரூபா மில்லியன் 2007(ஆ) |
|---|---|---|---|---|
| 1. போக்குவரத்து | 211 | 243 | 21,885 | 26,863 |
| 2. பயணம் | 37 | -8 | 3,836 | -851 |
| 3. தொடர்பூட்டல், பணிகள் | 19 | 18 | 1,959 | 1,984 |
| 4. கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணிகள் | 98 | 110 | 10,188 | 12,169 |
| 5. கட்டடவாக்கப் பணிகள் | 24 | 27 | 2,456 | 3,015 |
| 6. காப்புறுதிப் பணிகள் | 20 | 15 | 2,081 | 1,681 |
| 7. ஏனைய வியாபாரப் பணிகள் | -138 | -153 | -14,297 | -17,029 |
| 8. அரச செலவினம் வே.எ.கு | -14 | -14 | -1,448 | -1,531 |
| **மொத்தப் பணிகள்** | 257 | 239 | 26,660 | 26,301 |
| 1. ஊழியர்களின் இழப்பீடு | -11 | -11 | -1,138 | -1,240 |
| 2. நேரடி முதலீடு | -360 | -346 | -37,413 | -38,287 |
| 3. வட்டியும் ஏனைய கட்டணங்களும் | -18 | -1 | -1,873 | 485 |
| **மொத்த வருமானம்** | -389 | -358 | -40,424 | -39,041 |
| 1. தனியார் | 1,904 | 2,214 | 197,861 | 245,006 |
| 2. பொது அரசு | 101 | 97 | 10,524 | 10,677 |
| **மொத்த நடைமுறை மாற்றல்கள்** | 2,004 | 2,311 | 208,385 | 255,684 |

(அ) வெளிப்படுத்துகை ப.நா. நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லுகின்றது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2007இல் ஐ.அ.டொலர் 385 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாறிருப்பினும், 2007இல் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கைத்தொழிலுக்கு ஆதரவளிப்பதற்காக, 2006 வரவு செலவுத்திட்டத்தில் விதிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 10 கொண்ட விசா கட்டணத்தினை பிற்போட அரசங்கம் ஒப்புதலளித்தமை, சுற்றுலா தொழிற்பாடுகளின் மீது கொடுபடத்தக்க பெறுமதிசேர் வரியினைத் தற்காலிகமாக பிற்போடப்பட்டமை தாமதமான பெறுமதிசேர் கொடுப்பனவுகளின் மீதான தண்டப் பணத்தினை இடை நிறுத்தியமை மற்றும் மூலதனக் கொடுப்பனவுகள் மீதான சட்ட இசைவுத் தாமதம் போன்ற வழிகளில் நிவாரண வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. 2007இன் மிக முக்கியமான அபிவிருத்தி யாதெனில் 2005ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலா வெளிப்படுத்தல் சட்டம் 2007 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கிடப்பட்டமையாகும். இச்சட்டம் சுற்றுலா நடைமுறைக்கிடப் பட்டமையுடன், இலங்கை அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், இலங்கை மாநாட்டுப் பணியகம், இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுலா அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவனம் என்பன தொழிற்படத் தொடங்கியமையானது தனியார்துறையின் பங்களிப்பினை உத்வேகப்படுத்தியது. புதிய சுற்றுலாச் சட்ட முகாமைத்துவத்தில் அரச - தனியார் பங்குடமையினையும் சுற்றுலா கைத்தொழிலினைக் கட்டுப்படுத்துவதிலும் கூடியளவிற்கு காத்திரமான தன்மையினை உருவாக்குமென நம்பப்படுகின்றது. இத்துறையில், தனியார் துறையினர் முக்கிய தொழிற்பாட்டாளர்களாக இருப்பதனால், வெளிநாட்டுச் சந்தைகளையும் அதேபோன்று உள்நாட்டு முயற்சிகளையும் இலக்காகக் கொண்ட சுற்றுலாக் கொள்கையின் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான இத்துறையின் பங்களிப்பு அரசாங்கத்தினால் வழங்கப்படும் வசதிகளின் மூலம் அதிகரிக்கலாம் போல் தோன்றுகின்றது. வருகையின் நோக்கத்தின் அடிப்படையில் 2007இல் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 67 சதவீதம் விடுமுறை நோக்கங்களிற்கும், 11 சதவீதம் வியாபார நோக்கங்களிற்கும், 8 சதவீதம் நண்பர்கள் மற்றும் உறவினர்களை சந்திப்பதற்கும், 3 சதவீதம் சமய மற்றும் கலாச்சார நோக்கங்களிற்கும் அதேவேளை 2 சதவீதம் மாநாடு மற்றும் கூட்டங்களுக்கும் வருகை தந்திருந்தினர்.

**அட்டவணை 5.8**

**சுற்றுலாவின் செயலாற்றம்**

| விடயம் | 2003 | 2004 | 2005 | 2006(அ) | 2007(ஆ) | வளர்ச்சி வீதம் 2006(அ) | வளர்ச்சி வீதம் 2007(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| சுற்றுலா வருகைகள் | 500,642 | 566,202 | 549,308 | 559,603 | 494,008 | 1.9 | -11.7 |
| சுற்றுலா விருந்தாளிகளின் இரவுகள் (000) | 5,093 | 5,742 | 4,754 | 5,793 | 4,940 | 21.9 | -14.7 |
| தங்கும் அறை விகிதம் (%) | 53.2 | 59.3 | 45.4 | 47.8 | 46.2 | 5.3 | -3.3 |
| மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்) | 32,810 | 42,059 | 36,377 | 42,586 | 42,571 | 17.1 | 0.0 |
| தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூபா) | 65,536 | 74,283 | 66,223 | 76,100 | 86,175 | 14.9 | 13.2 |
| மொத்தத் தொழில் நிலை (எண்ணிக்கை) | 112,226 | 129,038 | 125,004 | 133,558 | 145,239 | 6.8 | 8.7 |
| நேரடி | 46,761 | 53,766 | 52,085 | 55,649 | 60,516 | 6.8 | 8.7 |
| மறைமுகம் | 65,465 | 75,272 | 72,919 | 77,909 | 84,723 | 6.8 | 8.7 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

## தொலைத் தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பணிகளிலான வர்த்தகம்

**2007இல் தொலைத் தொடர்பூட்டல்களில் இருந்தான தேறிய வருவாய்கள் 4.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** எனினும், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் பணிகளின் அதிகரித்த பயன்பாடு, பன்னாட்டு நேரடி தொலைபேசி வசதிகள் மற்றும் 2003இல் பன்னாட்டு தொலைத் தொடர்பூட்டல் நுழைவு வழி தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர் அதிகரித்த போட்டியின் காரணமாக செல்லிடத் தொலைபேசி மற்றும் நிலையாகப் பொருத்தப்பட்ட தொலைத் தொடர்பூட்டல் தொழிற்பாட்டாளர்கள் இருவரினாலும் வழங்கப்பட்ட மலிவான அழைப்புக் கட்டணங்கள் என்பன பன்னாட்டு தொலைத்தொடர்பூட்டல் பணிகள் கூடுதலாகப் பயன்படுத்தவதற்கு இலங்கையர்களை ஊக்குவித்தன. இதன்விளைவாக, தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல் 2003ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது.

**2007இல் மென்பொருட்கள், தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற வணிகச் செய்முறை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் அறிவு செய்முறை போன்ற தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகள் மற்றும் ஏனைய தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான பணிகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மேலும் அதிகரித்தன.** ஒப்பீட்டு ரீதியில் சிறந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள், தேர்ச்சி பெற்ற தொழிற்படை கிடைக்கக்கூடியதாகவுள்ளமை, போட்டித் தன்மையான விலைகள், நம்பகமானதும் வினைத்திறன்மிக்கதுமான பணி வழங்கல் என்பன இக்கைத்தொழிலின் வளர்ச்சி உறுதியாகக் காணப்படுவதற்கு உதவின. 2007ஆம் ஆண்டுப் பகுதியில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பூட்டல் கைத்தொழிலில் தொழிற்படுகின்ற இலங்கைக் கம்பனிகள், கடல் கடந்த நாடுகளுக்கு, குறிப்பாக மத்திய கிழக்கு மற்றும் கிழக்காபிரிக்க நாடுகளுக்கு மென்பொருள் தேவைகளை வழங்குவதில் சிறந்த முறையில் செயலாற்றின. கணக்கியல் மற்றும் சட்டம் போன்று இத்துறைகளிலும் தகுதியான தொழில்சார் நிபுணர்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பதன் காரணமாக வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற வணிகச் செய்முறை மற்றும் வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் அறிவு செய்முறை என்பனவற்றினை மேம்படுத்துவதில் ஒப்பீட்டு ரீதியில் இலங்கை அநுகூலங்களைக் கொண்டிருக்கிறது. மேலும், இலங்கை சிறப்பியல்புகளை வளர்த்துக் கொள்ளல் மற்றும் சிறப்பு தகவல் தொழில் நுட்பவலயங்களை உருவாக்கிக் கொள்வதன் மூலம் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை மேலும் மேம்படுத்திக் கொள்வதன் மூலம் தொழிற்படத் தேவையான மிக தூண்டுதலளிக்கக்கூடிய சூழலொன்றை உருவாக்கிக் கொள்ளுதல் என்பனவற்றினூடாக வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற வணிகச் செய்முறை மற்றும் வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் அறிவுச் செய்முறை கைத்தொழில்களிலிருந்து மிகக் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இயலாற்றலை இலங்கை கொண்டுள்ளது.

## வருமானத்தின் உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்

**வருமானக் கணக்கிற்கான மொத்த உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 449 மில்லியனிற்கு ஏறத்தாழ 44 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளின் முதலீட்டிலிருந்தான அதிகரித்த வருமானம் முக்கிய காரணமாக இருந்ததுடன் இது, 2007இல் வருமானக் கணக்கில் காணப்பட்ட விரிவடைந்து செல்லும் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த உதவியது.** 2007இல் அலுவல்சார் ஒதுக்கங்களின் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் ஐ.அ.டொலர் 105 மில்லியனிற்கு 44 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர்ந்த உலகளாவிய வட்டி வீதங்களும் 2007இல் அலுவல்சார் ஒதுக்குகள் மேலும் ஒன்று சேர்ந்தமையுமே முக்கிய காரணமாகும். மேலும், ஐ.அ.டொலர் மற்றைய முக்கிய நாணயங்களான யூரோ, இஸ்சேலிங் பவுண், மற்றும் யப்பானிய யென் போன்றவற்றிற்கெதிராக ஐ.அ.டொலர் உயர்ந்தளவில் தேய்வடைந்தமையானது, ஐ.அ.டொலர் நியதிகளில், சந்தைப் பெறுமதிகளில் குறிப்பிடத்தக்க நன்மைகளை விளைவித்தது. 2007இல் நிலவிய உயர்ந்த உலகளாவிய வட்டி வீதங்களின் காரணமாக வர்த்தக வங்கிகள் உட்பட தனியார் துறையின் வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருவாய்களும் அதிகரித்தன. அதேவேளை, கடந்த காலங்களில் ஒன்று சேர்ந்த படுகடன் மற்றும் 2005இல் சுனாமியின் காரணமாக படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தின் கீழ் பிற்போடப்பட்ட வட்டி தீர்ப்பனவு செய்யப்பட்டமை என்பனவற்றின் காரணமாக, இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டு படுகடன் மீதான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளின் விளைவாக வருமானக் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களும் ஐ.அ.டொலர் 807 மில்லியனுக்கு ஏறத்தாழ 15 சதவீதத்தினால் அதிகரித்தது. வெளிநாட்டு நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளினால் ஏற்கனவேயுள்ள தொழிற்பாடுகளை விரிவாக்குவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள் முதலீடுகளுக்கான எதிரீட்டு பதிவுகளை உள்ளடக்கிய வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் செய்யப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளின் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களின் வெளி அனுப்பலும் கணிசமாக அதிகரித்தன.

## நடைமுறை மாற்றல்கள்

**தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2007இல் ஐ.அ.டொலர் 2,502 மில்லியனை அடைந்தன.** இவ்வதிகரிப்பிற்கு, 2007இல் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காகச் சென்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 217,306இற்கு 8 சதவீதத்தினால் அதிகரித்தமையும் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத் மற்றும் கட்டார் போன்ற எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் வருமான மட்டத்தில் ஏற்பட்ட உயர்வின் காரணமாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் சராசரிக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பும், கொரியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற உயர் கூலிகளைக் கொண்ட நாடுகளுக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையும் முக்கிய

காரணங்களாக அமைந்தன. மத்திய வங்கியின் முன் முயற்சியினைத் தொடர்ந்து, வங்கித்தொழில் வழிமுறையினூடாக பணத்தினை மாற்றல் செய்வதன் நன்மைகள் தொடர்பாக புலம் பெயர்ந்த தொழிலாளர்களிடையே கூடியளவு விழிப்புணர்வினை உருவாக்குவதனூடாக கூடியளவு பண அனுப்பல்களைத் திரட்டுவதற்காக வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட புதிய வழிமுறைகள், பணவனுப்பல்களைத் திரட்டுவதற்காக தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் பல முக்கிய நாடுகளில் மேலதிக வங்கி அலுவலர்களைப் பணிக்கமர்த்தியமை என்பன 2007இல் பணவனுப்பல்கள் அதிகரிக்க உதவின. அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2007இன் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏறத்தாழ 70 சதவீதத்தினை நிதியிட்டிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### நடைமுறைக் கணக்கு நிலுவை


**நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை 2006இன் ஐ.அ.டொலர் 1,499 மில்லியனிலிருந்து 2007இல் ஐ.அ.டொலர் 1,369 மில்லியனிற்கு சிறிதளவில் குறுக்கமடைந்தது.** மொ.உ.உற்பத்தி நியதிகளில் இது 2006இல் மொ.உ.உற்பத்தியில் 5.3 சதவீதத்திலிருந்து 2007இல் மொ.உ.உற்பத்தியில் 4.2 சதவீதத்திற்கு மேம்பட்டது. அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள், விரிவடைந்த நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையினை கட்டுப்படுத்தவும் நடைமுறைக் கணக்கு மற்றும் செலாவணி வீதங்கள் மீதான உயர்ந்த பன்னாட்டு பண்ட விலைகளின் மோசமான தாக்கத்தினை தணிக்கவும் உதவின. உயர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை நாட்டின் உயர் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினை பிரதிபலித்து, 7-8 சதவீதமான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்குத் தேவையான முதலீட்டுச் செலவினத்தினை ஈடு செய்வதற்கான கூடியளவு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கான தேவையினை இது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

## 5.5 மூலதன மற்றும் நிதியியல் பாய்ச்சல்களும் சென்மதி நிலுவையும்

### வெளிநாட்டு நேரடி முதலீடு

**2007இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் 2006இல் பதிவு செய்யப்பட்ட முன்னைய உச்ச மட்டத்தை விஞ்சி இலங்கையின் பொருளாதாரத்தின் மீதான தொடர்ச்சியான முதலீட்டாளர் நம்பிக்கையினையும் நாட்டில் நிலவும் முதலீட்டாளர் சிநேகபூர்வ முதலீட்டு அமைப்பினையும் பிரதிபலித்தது.** முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் மொத்த உட்பாய்ச்சல் 2006இன் ஐ.அ.டொலர் 604 மில்லியனிலிருந்து 2007இல் ஐ.அ.டொலர் 734 மில்லியன் கொண்ட உச்சமட்டத்தினை அடைந்தமைக்கு ஏற்கனவேயிருந்த முதலீட்டுச்சபைக் கம்பனிகளினால், குறிப்பாக பணிகள் துறையில் ஈடுபட்டுள்ள கம்பனிகளினால் வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள்முதலீட்டில் ஏற்பட்ட கூடுதலான அதிகரிப்பே காரணமாகும். அபிவிருத்தி குறைந்த பிரதேசங்களில் முதலீடுகளை

வரைபடம் 5.8 நிதியியல் கணக்கிற்கான பிரதான உட்பாய்ச்சல்கள்




மேம்படுத்துவதற்கான நிபயும் நிலைய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான முதலீட்டுச்சபையின் முயற்சிகளும் 2007இன் உயர்ந்த முதலீட்டு உட்பாய்ச்சல்களுக்கு பங்களித்தன. 2007இல் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 221 மில்லியன் கொண்ட பங்கு மூலதனம், பங்குடமையாளர்களின் ஐ.அ.டொலர் 96 மில்லியன் கொண்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், ஐ.அ.டொலர் 63 மில்லியன் கொண்ட கம்பனிகளுக்குள்ளேயான கடன்பாடுகள், ஐ.அ.டொலர் 131 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் ஏற்கனவேயுள்ள கம்பனிகளினால் வைத்திருக்கப்பட்ட ஐ.அ.டொலர் 223 மில்லியன் கொண்ட வருவாய்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. அதேவேளை, இவ்வாண்டில் உள்நாட்டுக் கம்பனிகள் வெளிநாடுகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப் பட்டமையால் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் 2006இன் ஐ.அ.டொலர் 30 மில்லியனிலிருந்து 2007இல் ஐ.அ.டொலர் 55 மில்லியனுக்கு அதிகரித்தது. நாட்டில் கூடுதலான வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு, வீதிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் வலு வழங்கல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை பன்னாட்டு தரங்களுக்கு அபிவிருத்தி செய்வதும், கடன்பட்ட நிதியங்களுடன் தற்பொழுது அரசாங்கத்தினால் தனித்து மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியமான உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களில் கூடியளவு தனியார், அரச பங்குடமை ஒழுங்குகளை மேம்படுத்துவதும் அவசியமானதாகும். உயர்ந்தமட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளை எய்துவதற்கு சொத்துரிமைகளை உறுதிப்படுத்தல், புதிய முதலீடுகளுக்கான நிலங்களை விரைந்து ஒதுக்குதல், பிணக்குகளுக்கு ஆற்றல் வாய்ந்த சிறந்ததும் விரைந்ததுமான தீர்வினைக் காணுதல் மற்றும் பெருமளவு தொழிலாளர்களைத் திரட்டுதல் போன்ற இயலுமைமிக்க வியாபாரச் சூழலைப் பேணுவதும் அவசியமானதாகும்.

### அரசிற்கான வெளிநாட்டு மூலதனம்

#### நடுத்தர மற்றும் நீண்டகாலம்

**2007இல், நாட்டிற்கான முதலாவது முறிவழங்கல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக கடன்கள் மற்றும் கொடைகள் இரண்டினையும் உள்ளடக்கிய அரசிற்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல் கணிசமாக அதிகரித்தது.** அனைத்து பிராந்தியங்களிலுமுள்ள முதலீட்டாளர்களுடன் பன்னாட்டு மூலதனச் சந்தைகளிலிருந்து

ஐ.அ.டொலர் 500 மில்லியனை அரசாங்கம் வெற்றிகரமாகத் திரட்டியமையானது, பன்னாட்டு மூலதனச் சந்தைகளை துணை வாடிக்கையாளர் பிரச்சனைகள் மோசமாகப் பாதித்தமைக்கிடையிலும் இலங்கையின் முதலாவது நாட்டிற்கான முறிகளின் மீதான மிகுந்த ஈடுபாட்டினைக் காட்டுவதாக இருந்தது. இதன் விளைவாக, 2007ஆம் ஆண்டுப்பகுதியில் அரசாங்கம் 2006ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 1.6 பில்லியன் கொண்ட கடன்களையும் கொடைகளையும் திரட்டக்கூடியதாக இருந்தது. இவ்வாண்டுக் காலத்தில், நாட்டிற்கான முறிப் பெறுகைகள் உட்பட அரசாங்கத்திற்கான மொத்த நீண்டகால மற்றும் நடுத்தர காலக் கடன்களின் பாய்ச்சல் 2006இன் ஐ.அ.டொலர் 932 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,290 மில்லியனுக்கு அதிகரித்தது. 2007இல் பெறப்பட்ட மொத்தக் கடன்களில் 51 சதவீதம் சலுகை நியதிகளிலும் மீதி 49 சதவீதம் வர்த்தக நியதி மற்றும் நிபந்தனைகளின் மீதும் பெறப்பட்டது. இது சலுகை ரீதியான கடன்களின் உட்பாய்ச்சல் ஏறத்தாழ 6.2 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 660 மில்லியனுக்கு வீழ்ச்சியடைய வழிவகுத்தது. முறிகளின் பெறுகைகள் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலை விரைவுபடுத்துவதற்கு பயன்படுத்த முடியுமெனினும், படுகடன் பாய்ச்சல்களின் அதிகரிப்பு எதிர்காலத்தில் அரசாங்கத்தின் கடன் சுமையினை அதிகரிக்குமாகையால் வெளிநாட்டு உள்நாட்டு முதலீடுகளுடன் அரச - தனியார் பங்குடமைகளின் கீழ் பாரிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவது கூடியளவிற்கு அநுகூலமானதாகும். நடைமுறை மற்றும் மூலதனத் தன்மைகள் இரண்டினையும் உள்ளடக்கிய மொத்தக் கொடைகள் 2006இன் ஐ.அ.டொலர் 287 மில்லியனிலிருந்து 2007இல் ஐ.அ.டொலர் 277 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2006ஆம் ஆண்டுப்பகுதியில் அரசாங்கம் 2004ஆம் ஆண்டில் சுனாமியினால் சேதமடைந்த உட்கட்டமைப்பின் நிருமாணத்திற்காக கணிசமானளவு தொகைக் கொடைகளைப் பெற்றது. அபிவிருத்திப் பங்காளர்களினால் நிதியிடப்பட்ட முக்கிய செயற்றிட்டங்கள் விரைவாக நடைமுறைக்கிடப்பட்ட போதும் வெளிநாட்டுக் கொடைகளின் பயன்பாட்டு வீதம் 2006இல் 22.5 சதவீதத்திலிருந்து 2007இல் 21.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு இவ்வாண்டுப் பகுதியில், புதிய செயற்றிட்டங்களுக்காக அரசாங்கத்தினால் பெறப்பட்ட புதிய உதவிக்கடப்பாடுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு பெருமளவிற்கு காரணமாக இருந்தது. இது அடுத்த ஒரு சில ஆண்டுகளில் பகிர்ந்தளிக்கப்படும். அதேவேளை, 2007இல் அரசாங்கத்தின் கடன் மீள்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 618 மில்லியனுக்கு 40 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு சுனாமியின் காரணமாக பரிஸ் கழக உறுப்பினர்களினால் 2005இல் பிற்போடப்பட்ட ஏழு தவணைகளில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டிய படுகடனின் இரண்டு தவணைகளைக் கொண்ட மீள்கொடுப்பனவுகளே முக்கிய காரணமாகும். அத்தகைய முதலாவது தவணைக் கொடுப்பனவு 2006இல் செய்யப்பட்டது.

**அட்டவணை 5.9**
**2007 காலப்பகுதியில் வெளிநாட்டு கடனிடலின் மூலமான பிரதான செயற்றிட்டங்கள்**

| கடன் வழங்குனர் | செயற்றிட்டம் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர் மில்லியனில் |
|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | 134.6 |
| இதில் : | தென் மாகாண போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் | 19.1 |
| | வீதி வலையமைப்பு மேம்பாட்டுச் செயற்றிட்டம் | 16.2 |
| | வலுத்துறை அபிவிருத்தி செயற்றிட்டம் | 13.1 |
| | வீதித்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | 12.2 |
| | இரண்டாம்நிலை நகரம் மற்றும் கிராமிய சமூகத்தின் நீர்/உடல்நலம் | 10.2 |
| **பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு** | | 74.2 |
| இதில் : | வீதித்துறை உதவியளித்தல் செயற்றிட்டம் | 18.9 |
| | வட கிழக்கு வீடமைப்பு புனரமைப்புச் செயற்றிட்டம் | 17.9 |
| | கிராமியப் பொருளாதாரத்திற்கான புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்திச் செயற்றிட்டம் | 9.8 |
| **யப்பானிய அரசாங்கம்** | | 197.0 |
| இதில் : | தென்பகுதி நெடுஞ்சாலைகள் நிருமாணச் செயற்றிட்டம் | 32.0 |
| | மேல் கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டம் | 21.3 |
| | சிறிய மற்றும் நுண்பாக கைத்தொழில்கள் தலைமை மற்றும் தொழில் ஊக்குவிப்பு | 19.5 |
| | இலங்கை சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீட்சி மற்றும் முன்னேற்றப்படுத்தல் செயற்றிட்டம் | 15.3 |
| | வறியோருக்கான கிராமிய அபிவிருத்தி திட்டம் | 15.0 |
| | வளவ கங்கை இடது கிளை நீர்ப்பாசன மற்றும் விரிவாக்க செயற்றிட்டம் II | 13.5 |
| | சிறிய அளவு உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் | 11.0 |
| | சூழலுக்கு சிநேகபூர்வமான தீர்வு நிதியம் | 10.7 |
| | கொழும்பு பெரும்பாகத்திற்கான களுகங்கை நீர் விநியோக செயற்றிட்டம் | 10.3 |
| | மாகாண வீதி மேம்படுத்தல் செயற்றிட்டம் | 9.8 |
| **சீன மக்கள் குடியரசு அரசாங்கம்** | | 175.4 |
| இதில் : | நுரைச்சோலை வலுப்பொறி | 142.8 |
| | 100 பயணிகள் புகையிரதப் பெட்டிகளின் வழங்கல் | 12.5 |
| **ஐரோப்பிய முதலீட்டு வங்கி** | | 42.9 |
| | சுனாமிக்கு பின்னரான கொடுகடன் - ஒப்பந்தம் அ | 28.9 |
| | டி.எவ்.சி.சி உலகக் கொடுகடன் II | 13.9 |
| **டென்மார்க் அரசாங்கம்** | | 20.8 |
| இதில் : | கொழும்பு வடிகாலமைப்பு புனரமைப்பு செயற்றிட்டம் | 11.4 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
வெளிநாட்டு மூலவளத் திணைக்களம்

## குறுங்காலம்

**வெளிநாட்டவர்களினால் அரச திறைசேரி முறிகளுக்கு செய்யப்பட்ட முதலீடுகளின் வாயிலாக ஏற்பட்ட தேறிய குறுங்கால உட்பாய்ச்சல் 2007இல் ஐ.அ.டொலர் 373 மில்லியனாகக் காணப்பட்டது.** முதற் தடவையாக, அரசாங்கம் 2006 நவெம்பர் 1ஆம் நாளிலிருந்து வெளிநின்ற திறைசேரி முறிகளின் பெறுமதியில் ஆகக் கூடியது 5 சதவீதம் வரையான முதலீட்டினை வெளிநாட்டவர்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதுடன் இவ்வரையறை 2007 திசெம்பர் 1ஆம் நாளன்று 10 சதவீதத்திற்கு மேலும் உயர்த்தப்பட்டது. இம்முறிகள் நீண்டகால முதிர்ச்சிகளைக் கொண்டனவாக இருந்த போதும், இம்முறிகளை வைத்திருக்க வேண்டிய குறைந்தபட்ச கட்டாய தேவைப்பாடு எதுவுமில்லாததாலும் முதலீட்டாளர்கள் எந்த நேரத்திலும் இதனை காசாக மாற்றிக் கொள்ளவும் தமது முதலீடுகளை வெளிநாட்டிற்கு அனுப்புவதில் எவ்வித கட்டுப்பாடுகளுமில்லாமையாலும் இப்பாய்ச்சல்கள் குறுங்கால மூலதனமாக பாகுபடுத்தப்பட்டன. திறைசேரி முறிகள் மீது முதலீடு செய்யப்பட்ட நிதிகளின் சடுதியான

எந்தவொரு வெளிப்பாய்ச்சல்களிலிருந்தும் தோன்றுகின்ற வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளின் தளம்பல்களைத் தணிக்கும் பொருட்டு மத்திய வங்கி ஐ.அ.டொலர்களில் சிறப்பு ஒதுக்கொன்றினை உருவாக்கியுள்ளதுடன், முறிகளின் பெறுகைகளை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு வெளிநாட்டு முறிகளின் முதலீட்டாளர்கள் கோருமிடத்து இது வெளிநாட்டுச் செலாவணியினை வழங்கவும் கடமைப்பட்டுள்ளது.

## தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கடன் மூலதனம்

**2007இல் தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வெளிநாட்டுக் கடன்களின் பாய்ச்சல் அதிகரித்தது.** 2007இல் தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான நீண்டகால கடன் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 199 மில்லியனுக்கு 43 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தனியார்துறையின் அதிகரித்த கடன்பாடுகளே காரணமாகும். 2007இல் ஒப்பீட்டு ரீதியில் உள்நாட்டு வட்டி வீதங்கள் உயர்வாக இருந்தமையின் காரணமாக தனியார்துறை தொழில் முயற்சிகள் பலவும், குறிப்பாக தொலைத் தொடர்பூட்டல் மற்றும் நிதித்துறைகள், அவற்றின் வியாபாரங்களை விரிவாக்குவதற்கான நிதியின் பொருட்டு வெளிநாட்டுக்கடன்களைப் பெற்றன. அரச கூட்டுத்தாபனங்களுக்கான வெளிநாட்டுக் கடன்களை உத்தரவாதப்படுத்துவதில் அரசாங்கம் எச்சரிக்கையாக இருப்பதனால் இவ்வாண்டுக் காலத்தில் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கடன்பாய்ச்சல் எதுவுமிருக்க வில்லை. எனினும், தனியார்துறை அவற்றின் முதலீட்டுத் தேவைகளுக்கு பன்னாட்டு மூலதனச் சந்தைகளிலிருந்து மூலதனங்களைத் திரட்டுவதற்கு அரசாங்கம் தற்பொழுது ஊக்குவித்து வருகின்றது. இப்பின்னணியில் 2008 வரவு செலவுத்திட்டத்தில் தனியார்துறையின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மீது அறிவிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் 2008இல் குறைக்கப்படும்.

## தனியார்துறைக்கான குறுங்கால மூலதனம்

**மொத்த தேறிய குறுங்கால மூலதன உட்பாய்ச்சல் 2006ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 610 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2007இல் ஐ.அ.டொலர் 206 மில்லியனாகக் காணப்பட்டது. இதற்கு வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசின் உள்நாட்டில் வெளிநாட்டு நாணயக் கடன்பாடு குறைந்தளவில் இருந்தமையே முக்கிய காரணமாகும்.** தேறிய அடிப்படையில் அரசாங்கம் 2006இன் ஐ.அ.டொலர் 394 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2007இல் அரசாங்கம் ஐ.அ.டொலர் 200 மில்லியன்களை வங்கித்தொழில் முறையிலிருந்து கடன்பட்டது. அதேவேளை, பங்குச் சந்தைக்கான தேறிய சொத்துப்பட்டியல் முதலீடுகளின் உட்பாய்ச்சல் 2006இன் ஐ.அ.டொலர் 51 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2007இல் ஐ.அ.டொலர் 101 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு வெளிநாட்டில் அதிகரித்த வெளிநாட்டு நாணய வைப்புக்களே காரணமாக அமைந்தன. ஆசியாவில் சிறப்பாகச் செயற்படும் சந்தைகளில் ஒன்றாகத் தொடர்ந்தும் தனது இடத்தைப் பேணிய கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையமானது மொத்த உட்பாய்ச்சல்கள் 423 மில்லியன் ஐ.அ.டொலர்களை 2007ல் பெற்றுக்கொடுத்தது. 2007ல் முதலீடு காரணமாக வெளிநாடுகளிலான வெளிநாட்டுநாணய வைப்புகள் அதிகரித்ததால் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டு சொத்து 280 மில்லியன் ஐ.அ.டொலர் ஆல் அதிகரித்தது. அதேவேளை வர்த்தக வங்கிகளின் தேறிய பொறுப்புக்கள் 2007இல் ஐ.அ.டொலர் 364 மில்லியனால் அதிகரித்தமைக்கு ஒரு சில வர்த்தக வங்கிகள் இவ்வாண்டு காலத்தில் வெளிநாட்டுக் கடன்பாடுகளை நாடியமையும் வெளிநாட்டு நாணய வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் காரணங்களாக அமைந்தன.

## சென்மதி நிலுவையும் வெளிநாட்டு ஒதுக்குகளும்

**மூலதனம் மற்றும் நிதியியல் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல், விரிவடைந்த நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையினை எதிரீடு செய்ய வேண்டிய அளவிற்கும் கூடுதலாக இருந்ததினால் சென்மதி நிலுவை தொடர்ந்து மூன்றாவதாண்டாகவும் மிகையினைப் பதிவு செய்தது.** சென்மதி நிலுவை மிகை 2006ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 204 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2007இன் மிகை ஐ.அ.டொலர் 531 மில்லியனாகக் காணப்பட்டது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலிலிருந்தான ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல் இவ்வுயர்ந்த மிகைக்கு முக்கியமாகப் பங்களித்தது.

## வெளிநாட்டு ஒதுக்குகள்

**2007இல் சென்மதி நிலுவை மிகை மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை மேலும் வலுப்படுத்தியது.** 2007இல் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பெறுகைகள் நீங்கலான, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 3,063 மில்லியனிற்கு அதிகரித்தது. மசகு எண்ணெய் மற்றும் இன்றியமையாத பண்டங்களின் அதிகரித்த பன்னாட்டு விலைகளின் விளைவாக உயர்ந்த இறக்குமதிச் செலவினம் காணப்பட்ட போதும் ஒதுக்குகள் 2006இன் 3.0 மாத இறக்குமதிகளுக்குப் போதுமான அளவிலிருந்து 2007இல் 3.3 மாத இறக்குமதிகளுக்குப் போதுமான அளவிற்கு அதிகரித்தன. எனினும், குறுங்காலப்படுகடன் மற்றும் பொறுப்புக்களுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் விகிதத்தினால் அளவிடப்பட்டவாறான ஒதுக்கு போதுமை 2006இன் 82 சதவீதத்திலிருந்து 2007இல் 77 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு குறுங்காலப்படுகடன் மற்றும் பொறுப்புக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அதேவேளை, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பெறுகைகள் நீங்கலாக நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 3,694 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 4,511 மில்லியனுக்கு அதிகரித்தது. இதற்கு வெளிநாட்டு நாணய வைப்புக்களின் கணிசமான அதிகரிப்பின் காரணமாக, வர்த்தக வங்கிகள் தமது வெளிநாட்டுச் சொத்துக்களை அதிகரித்துக் கொண்டமையே காரணமாகும்.

**அட்டவணை 5.10**

**இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (அ)**

| உடைமையாளர் | ஐ.அ.டொலர் மில்லியன் (ஆ) | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 |
| 1. அரசு | 55 | 95 | 131 | 128 | 99 | 5,320 | 9,897 | 13,417 | 13,789 | 10,768 |
| 2. அரச முகவர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| 3. மத்திய வங்கி | 2,274 | 2,101 | 2,604 | 2,709 | 3,409 | 219,984 | 219,795 | 265,873 | 291,747 | 370,640 |
| 4. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் | 2,329 | 2,196 | 2,735 | 2,837 | 3,508 | 225,304 | 229,693 | 279,290 | 305,536 | 381,408 |
| 5. வர்த்தக வங்கிகள் | 889 | 1,243 | 1,466 | 1,169 | 1,448 | 86,011 | 129,987 | 149,656 | 125,867 | 157,454 |
| 6. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | 3,218 | 3,438 | 4,201 | 4,005 | 4,956 | 311,315 | 359,680 | 428,946 | 431,403 | 538,862 |
| 7. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் - மாதத்தில் | | | | | | | | | | |
| 7.1 வணிக இறக்குமதிகள் | 4.2 | 3.3 | 3.7 | 3.3 | 3.7 | | | | | |
| 7.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 3.6 | 2.9 | 3.3 | 2.9 | 3.3 | | | | | |
| 8. மொத்தச் சொத்துக்கள் - மாதத்தில் | | | | | | | | | | |
| 8.1 வணிக இறக்குமதிகள் | 5.8 | 5.2 | 5.7 | 4.7 | 5.3 | | | | | |
| 8.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 5.0 | 4.5 | 5.0 | 4.1 | 4.7 | | | | | |

(அ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றியப்பெறுகைகள் உட்பட சந்தை விலையில் கணிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 |
|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா (ஆண்டிறுதி) | 96.74 | 104.61 | 102.12 | 107.71 | 108.72 |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

## 5.6 வெளிநாட்டு படுகடனும் படுகடன் பணிகளும்

### வெளிநாட்டுப் படுகடன்

**2007இல் நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடனானது மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்ததன் பின்னர், சிறிதளவால் அதிகரித்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2006இன் 43.2 சதவீதத்திலிருந்து 2007இல் 44.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2007இல் ஐ.அ.டொலர் நியதிகளில் மொத்த வெளிநாட்டுப் படுகடன் ஏறத்தாழ 17 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 14,252 மில்லியனுக்கு அதிகரித்தது. ஐ.அ.டொலர் நியதிகளில் வெளிநாட்டுப் படுகடன் கடுமையாக அதிகரித்தமைக்கு ஏனைய முக்கியமான நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் பலவீனமடைந்தமையும் ஓரளவிற்கு காரணமாகும். வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடனில் 38.6 சதவீதம் சிஎஉ இலும் 25.7 சதவீதம் யப்பானிய யென்னிலும் 21.3 சதவீதம் ஐ.அ.டொலர்களிலும் குறித்துரைக்கப்பட்டிருந்தன. இதன்படி, திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடு மற்றும் டொலரில் குறித்துரைக்கப்படட பன்னாட்டு முறிகளின் வழங்கல் என்பனவற்றின் காரணமாக ஐ.அ.டொலர்களில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் 2007இல் அதிகரித்தது. ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் பொறுப்புக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடனும் பொறுப்புக்களும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2006இன் 50.3 சதவீதத்திலிருந்து 2007இல் 51.8 சதவீதத்திற்கு அதிகரித்தன. வெளிநாட்டு நாணய வைப்புக்கள் அதேபோன்று வெளிநாட்டிலுள்ள ஒரு சில வர்த்தக வங்கிகளினால் பெறப்பட்ட கடன்கள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் காரணமாக இவ்வாண்டுக் காலத்தில் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் அதிகரித்தமையினால் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 2007 இறுதியில் ஐ.அ.டொலர் 2,493 மில்லியனுக்கு 25 சதவீதத்திற்கும் கூடுதலாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன.

**வரைபடம் 5.9** **காலாண்டு ரீதியாக வெளிநாட்டுச் சொத்துக்கள்**




**வெளிநாட்டுப் படுகடனில் பெரும் பங்கிற்கு அரசாங்கம் தொடர்ந்தும் வகை கூறியது.** மொத்த நடுத்தர மற்றும் நீண்ட காலப்படுகடனில் அரசாங்கப் படுகடன் 91 சதவீதத்திற்கு வகைகூற எஞ்சிய 9 சதவீதமும் தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் இரண்டினதும் கடன்பாடுகளையும் ப.நா.

## அட்டவணை 5.11

## வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடனும் வங்கித் தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்


| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 (அ) | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 (அ) |
| **1. நடுத்தர, நீண்டகாலப்படுகடன்** | 10,116 | 10,699 | 10,690 | 11,580 | 13,142 | 978,556 | 1,119,155 | 1,091,644 | 1,247,250 | 1,429,212 |
| 1.1 அரசு | 8,812 | 9,523 | 9,354 | 10,478 | 12,005 | 852,433 | 996,203 | 955,207 | 1,128,493 | 1,305,225 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்களும் தனியார்துறையும் | 602 | 507 | 567 | 465 | 345 | 58,251 | 52,986 | 57,912 | 50,065 | 37,501 |
| 1.3 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்களும் தனியார்துறையும் | 334 | 411 | 388 | 393 | 539 | 32,319 | 42,944 | 39,588 | 42,376 | 58,553 |
| 1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் | 368 | 258 | 381 | 244 | 253 | 35,552 | 27,023 | 38,937 | 26,316 | 27,933 |
| **2. குறுங்கால படுகடன்** | 620 | 647 | 664 | 634 | 1,111 | 59,935 | 67,726 | 67,759 | 68,286 | 120,748 |
| 2.1 அரசு (ஆ) | - | - | - | - | 457 | - | - | - | - | 49,641 |
| 2.2 ஏனையவை(இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களும் (இ) | 620 | 647 | 664 | 634 | 654 | 59,935 | 67,726 | 67,759 | 68,286 | 71,107 |
| **3. வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (ஈ)** | 1,046 | 1,429 | 1,666 | 1,994 | 2,493 | 101,149 | 149,492 | 170,170 | 214,802 | 271,063 |
| 3.1 மத்திய வங்கி | 0 | 1 | 1 | 3 | 2 | 32 | 128 | 131 | 284 | 219 |
| 3.2 வர்த்தக வங்கிகள் | 863 | 1,066 | 1,388 | 1,681 | 2,046 | 83,514 | 111,464 | 141,753 | 181,040 | 222,389 |
| 3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள் | 182 | 362 | 277 | 311 | 446 | 17,604 | 37,899 | 28,286 | 33,478 | 48,454 |
| **4. மொத்த வெளிநாட்டுப்படுகடன் (1+2)** | 10,735 | 11,346 | 11,354 | 12,214 | 14,252 | 1,038,491 | 1,186,881 | 1,159,403 | 1,315,536 | 1,549,960 |
| **5. மொத்த வெளிநாட்டுப் படுகடனும் பொறுப்புக்களும் (1+2+3)** | 11,781 | 12,775 | 13,020 | 14,209 | 16,745 | 1,139,640 | 1,336,373 | 1,329,573 | 1,530,338 | 1,821,023 |
| **ஒப்பந்தக் குறிப்பு விடயங்கள்** | | | | | | | | | | |
| **நடுத்தர மற்றும் நீண்டகாலப்படுகடன்** | | | | | | | | | | |
| (1) செயற்றிட்டக்கடன்கள் | 6,961 | 7,702 | 7,416 | 8,071 | 8,996 | 673,432 | 805,646 | 757,262 | 869,336 | 978,027 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,726 | 1,763 | 1,655 | 1,959 | 2,331 | 167,007 | 184,467 | 169,038 | 210,986 | 253,413 |
| (3) நிரம்பலாளர் கொடுகடன் | 218 | 240 | 283 | 355 | 679 | 21,048 | 25,123 | 28,907 | 38,242 | 73,785 |
| (4) ப.நா.நி. எடுப்பனவுகள் | 368 | 258 | 381 | 244 | 253 | 35,552 | 27,023 | 38,937 | 26,316 | 27,933 |
| (5) ஏனைய கடன்கள் (உ) | 843 | 735 | 955 | 870 | 884 | 81,516 | 76,896 | 97,500 | 93,735 | 96,054 |
| **குறுங்காலப்படுகடனும் வங்கித்துறைப் பொறுப்புக்களும்** | 1,665 | 2,077 | 2,330 | 2,628 | 3,604 | 161,084 | 217,217 | 237,929 | 283,088 | 391,811 |
| **மொ.உ.உ.யின் சதவீதமாக (ஊ)** | | | | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 56.9 | 54.9 | 46.5 | 43.2 | 44.1 | 57.0 | 56.8 | 47.3 | 44.8 | 43.3 |
| மொத்த வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 5.5 | 6.9 | 6.8 | 7.1 | 7.7 | 5.6 | 7.1 | 6.9 | 7.3 | 7.6 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடனும் பொறுப்புக்களும் | 62.4 | 61.8 | 53.3 | 50.3 | 51.8 | 62.5 | 63.9 | 54.2 | 52.1 | 50.9 |
| குறுங்காலப்படுகடன் | 3.3 | 3.1 | 2.7 | 2.2 | 3.4 | 3.3 | 3.2 | 2.8 | 2.3 | 3.4 |
| குறுங்காலப்படுகடனும் வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்களும் | 8.8 | 10.0 | 9.5 | 9.3 | 11.1 | 8.8 | 10.4 | 9.7 | 9.6 | 10.9 |
| **மொத்தப்படுகடனினதும் பொறுப்புக்களினதும் சதவீதமாக** | | | | | | | | | | |
| குறுங்காலப்படுகடன் | 5.3 | 5.1 | 5.1 | 4.5 | 6.6 | 5.3 | 5.1 | 5.1 | 4.5 | 6.6 |
| குறுங்காலப் பொறுப்புக்கள் | 8.9 | 11.2 | 12.8 | 14.0 | 14.9 | 8.9 | 11.2 | 12.8 | 14.0 | 14.9 |
| அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக குறுங்காலப்படுகடன் | 26.6 | 29.5 | 24.3 | 22.4 | 31.7 | 26.6 | 29.5 | 24.3 | 24.4 | 31.7 |

(அ) தற்காலிகமானவை
(ஆ) வதியாதோருக்கு வழங்கப்பட்ட வெளிநின்ற திறைசேறி முறிகளை உள்ளடக்குகின்றது.
(இ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது
(ஈ) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பற்றுக்களும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளை உள்ளடக்கிய வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்
(உ) பொதுக் கூட்டுத்தாபனங்களினதும் தனியார்துறை நிறுவனங்களினதும் நீண்டகாலக் கடன்களை உள்ளடக்கியது
(ஊ) குடிமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நடைமுறை சந்தை விலைகளிலமைந்த மொ.உ.உ. யினை அடிப்படையாகக் கொண்டது.

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

நிதியத்தின் படுகடன் கடப்பாடுகளையும் பிரசன்னப்படுத்தியது. அரசாங்கத்தின் வெளிநாட்டுப்படுகடன் இருப்பில் சலுகை ரீதியான படுகடன்கள் ஏறத்தாள 86 சதவீதத்திற்கு வகை கூறின. எனினும், நாடு மத்திய வருமான நிலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதனால், பல்புடை நிதியியல் நிறுவனங்களிலிருந்து சலுகை ரீதியான கொடுகடன் வசதிகள் சிலவற்றைப் பெறுவது நடுத்தர காலத்தில் குறைவடைந்து விடும் போல் தெரிகிறது. இதன் விளைவாக, நடுத்தர காலத்தில் அரசாங்கத்தின் சலுகையற்ற படுகடன் இருப்புக்கள் நடுத்தர காலத்தில் அதிகரிக்கக்கூடும். எனினும், முக்கியமான உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை முக்கியமாக அரசாங்கத்துடனான பங்குடமை ரீதியில் பொறுப்பேற்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் அரசாங்கம் சலுகையற்ற படுகடன் இருப்புக்களை கட்டுப்படுத்தத்தக்கதொரு மட்டத்தில் பேண முடியும். இவற்றைப் பொறுத்தவரை, பன்னாட்டுச் சந்தைகளிலிருந்து பல்புடை நிதியியல் நிறுவனங்களிலிருந்து நடுத்தர, நீண்டகால வெளிநாட்டுக் கடன்களை திரட்டுவதற்கு அத்தகைய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களுக்கும் அவற்றின் சொந்த தொழிற்பாடுகளுக்கும் தனியார்துறையினை, குறிப்பாக

வரைபடம் 5.10 வெளிநாட்டுப் படுகடன்




நிதியியல் ரீதியாக ஆற்றல் வாய்ந்த தனியார்துறை தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பது அவசியமாகும். அது, வெளிநாட்டுப் படுகடனைத் திரட்ட இயலாத தனியார்துறை தொழில் முயற்சிகளுக்கு உள்நாட்டு நிதியியல் மூலவளங்களை விடுவிக்க உதவும்.

### வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

**கடன் தீர்ப்பனவுகள் மற்றும் அனைத்து வெளிநாட்டுப் படுகடன்கள் மீதுமான வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் நியதிகளில் 14.1 சதவீதத்தினால் அதிகரித்ததெனினும், வணிக ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்களின் விகிதமாக ஏறத்தாழ 13 சதவீதமாகக் காணப்பட்டது.** 2005இல் சுனாமியின் காரணமாக ஏற்பட்ட படுகடன் சட்ட இசைவுத்தாமதத்தின் காரணமாக ஒரே தடவையில் கழிக்கப்பட்டமையின் பின்னர் 2006 இலிருந்து தொடர்ச்சியாகக் காணப்பட்ட அட்டவணையிடப்பட்ட படுகடன்களின் மீள்கொடுப்பனவுகள், பாதுகாப்புக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளில் காணப்பட்ட அதிகரிப்பு, அரசாங்கத்தின் வர்த்தகக் கடன்பாடுகளின் அதிகரிக்கின்ற படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் மற்றும் முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் நலிவடைந்தமை என்பன 2007இல் ஐ.அ.டொலர் நியதிகளில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப் பங்களித்தன. நாடு அதன் வெளிநாட்டுப் படுகடன்களை தீர்ப்பனவு செய்வதற்கான இயலளவினை அளவீடு செய்கின்ற படுகடன் பணி விகிதம் இன்னமும் வசதியானதொரு மட்டத்தில் காணப்படுகின்றமைக்கு அரசாங்கத்தின் சலுகை ரீதியான படுகடனின் பாரிய இருப்பு, நீண்ட மீள்கொடுப்பனவுக் காலம் மற்றும் பொருள்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் தொடர்ச்சியான வளர்ச்சி என்பன முக்கியமான காரணங்களாகும்.

## 5.7 செலாவணிவீத அமைப்பும் செலாவணிவீத அசைவுகளும்

**மிதக்கவிடும் செலாவணிவீத அமைப்பின் கீழ், முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடையாது உறுதியான நிலையில் இருந்ததெனினும், சந்தையில் மிகையான தளம்பல்களை தணிப்பதற்காக மத்திய வங்கியின் மட்டுப்படுத்தப்பட்ட தலையீடுகளுடன் செலாவணி வீதத்தினை தீர்மானிப்பதில் கேள்வி மற்றும் நிரம்பல் ஆகிய சந்தை விசைகளுக்கு இசைவாக, அது நடந்து கொண்டது.** ஒத்தோபரளவில் ஐ.அ. டொலருக்கெதிராக ஏறத்தாழ 5

அட்டவணை 5.12 வெளிநாட்டுப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2003 | 2004 | 2005 | 2006 | 2007(அ) | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 (அ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 761 | 843 | 623 | 1,080 | 1,232 | 73,125 | 85,318 | 62,577 | 112,670 | 136,508 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 526 | 594 | 419 | 759 | 791 | 50,502 | 59,990 | 42,075 | 79,227 | 87,731 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 32 | 107 | 39 | 144 | 5 | 2,869 | 10,718 | 3,902 | 15,276 | 789 |
| (ii) ஏனையவற்றிற்கு | 493 | 487 | 380 | 615 | 786 | 47,632 | 49,272 | 38,173 | 63,952 | 86,942 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 235 | 249 | 204 | 321 | 441 | 22,623 | 25,328 | 20,502 | 33,443 | 48,777 |
| (i) ப.நா. நிதியத்திற்கு | 4 | 10 | 10 | 14 | 14 | 414 | 988 | 973 | 1,452 | 1,509 |
| (ii) ஏனையவற்றிற்கு | 230 | 240 | 194 | 307 | 427 | 22,209 | 24,340 | 19,530 | 31,991 | 47,268 |
| 2. வணிக ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்கள் | 6,544 | 7,284 | 7,887 | 8,508 | 9,452 | 631,549 | 738,714 | 793,153 | 885,380 | 1,046,074 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள், தனியார் மாற்றல்களில்லிருந்தான பெறுகைகள் | 8,127 | 9,004 | 9,891 | 10,980 | 12,403 | 784,408 | 912,817 | 994,751 | 1,142,515 | 1,373,101 |
| 4. படுகடன் பணி விகிதம் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 11.6 | 11.6 | 7.9 | 12.7 | 13.0 | 11.6 | 11.5 | 7.9 | 12.7 | 13.0 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 11.1 | 10.0 | 7.3 | 10.8 | 12.8 | 11.1 | 10.0 | 7.3 | 10.8 | 12.8 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 9.4 | 9.4 | 6.3 | 9.8 | 9.9 | 9.3 | 9.3 | 6.3 | 9.9 | 9.9 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 8.9 | 8.1 | 5.8 | 8.4 | 9.8 | 8.9 | 8.1 | 5.8 | 8.4 | 9.8 |
| 5. அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 502 | 484 | 268 | 442 | 467 | 48,452 | 48,952 | 26,927 | 45,996 | 51,694 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 66.0 | 57.4 | 43.0 | 41.0 | 37.9 | 66.3 | 57.4 | 43.0 | 40.8 | 37.9 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) ரூபாப் பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.

(இ) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் தவிர்த்து

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் தேய்வடைந்திருந்த ரூபா, ஒத்தோபர் பன்னாட்டு முறிவழங்கலிலிருந்தான பெறுகைகளின் உட்பாய்ச்சலுடன் அதன் தேய்வடைந்து செல்லும் போக்கினை மாற்றிக் கொண்டது. உயர்வடைந்து செல்லும் போக்கானது, 2007 நவம்பரில் திறைசேரி முறிகளின் வெளிநாட்டு உடைமை திறைசேரி முறிகளின் மொத்த வெளிநின்ற தொகையின் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமை, முக்கிய நாணயங்களுக்கு எதிராக ஐ.அ. டொலர் நலிவடைந்தமை என்பனவற்றின் காரணமாக மேலும் வலுவடைந்தது. இதன் விளைவாக, 2007 இறுதியில் ரூபாவின் தேய்வானது ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா, 2006 இறுதியில் காணப்படட ஏறத்தாள 5.2 சதவீதம் கொண்ட தேய்வுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 0.93 சதவீதத்திற்கு மிதமடைந்தது. ரூபாவானது இஸ்ரேர்லிங் பவுண் (2.7 சதவீதம்), யப்பானிய யென் (5.6 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக மிதமாகத் தேய்வடைந்த வேளையில் இது இந்திய ரூபா (11.9 சதவீதம்) மற்றும் யூரோ (10.9 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக உயர்ந்த வீதத்தில் தேய்வடைந்தது.


**2007இல் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 2006இன் வீதத்திலும் பார்க்க குறைந்த வீதத்தில் தேய்வடைந்த வேளையில் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் தொடர்ந்தும் உயர்வடைந்தது.** நாணயக் கூடையிலுள்ள பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் மிதமான பெய்ரளவுத் தேய்வினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 5 நாணயம் மற்றும் 24 நாணயக் கூடைகள் இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட இலங்கை ரூபாவின் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம், 2006இன் உயர்ந்த வீதத்துடன் ஒப்பிடுகையில் தாழ்ந்த வீதத்தில் தேய்வடைந்தது. அதேவேளை, பெயரளவு செலாவணி வீத வேறுபாடுகளுக்குப் புறம்பாக, நாடுகளிடையேயான பணவீக்க வேறுபாடுகளைக் கவனத்திற் கொள்கின்ற உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதம் 2007இல் மேலும் உயர்வடைந்து, பணவீக்க வேறுபாட்டு நியதிகளில் இலங்கையின் ஏற்றுமதிகளினது போட்டித் தன்மை மோசமடைந்தமையினை எடுத்துக் காட்டியது. இதற்கு, வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளிலுள்ள பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் சார்பு ரீதியில் உயர்ந்த உள்நாட்டுப் பணவீக்கமும் 2007இல் காணப்பட்ட ரூபாவின் குறைந்த பெயரளவு தேய்மானமும் காரணங்களாக இருக்கக்கூடும்.

## உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்திகள்

**பன்னாட்டு வர்த்தகம் தொழிலாளர் பணவனுப்பல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு, மற்றும் திறைசேரி முறிகளின் பேரிலான வெளிநாட்டு உட்பாய்ச்சல் என்பனவற்றில் உயர்ந்த வளர்ச்சி காணப்பட்ட போதும் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கை மட்டம் 2007இல் வீழ்ச்சியடைந்தது.** ரூபா மிகக் கடுமையாகத் தேய்வடையும் என்ற வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களின் பெருமளவு எதிர்பார்ப்புக்கள் காரணமாக ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதியிலும் சந்தை நடவடிக்கைகள் மிகக் குறைவாகக் காணப்பட்டன. எனினும், 2007இன் முதற் காலாண்டில், முதலாவது பன்னாட்டு முறிகளின் வழங்கல் வெற்றிகரமாக நிறைவடைந்தமை மற்றும் இதன் விளைவாக தேய்வடைந்து செல்லும் போக்கு மாற்றமுற்றமை என்பனவற்றின் காரணமாக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கை மட்டம் கணிசமாக அதிகரிக்கத் தொடங்கியது. முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளில் வெளிநாட்டுச் செலாவணிச் ச்தையின் நடவடிக்கை மட்டம் தொடர்பான வீழச்சியடைந்து செல்லும் போக்கினைத் தொடர்ந்து, வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் 2007இன் நான்காம் காலாண்டில் மீண்டும் உத்வேகமடைந்தன.

**வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட மிகையான ஏற்ற இறக்கங்களைச் சுமூகப்படுத்துவதற்காகவும் அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காகவும் 2007**

வரைபடம் 5.11 செலாவணி வீத அசைவுகள்



**அட்டவணை 5.13** **செலாவணிவீத அசைவுகள்**

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு இறுதி வீதங்கள் | | | ஆண்டுச் சராசரி | | | புள்ளிக்குப்புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
| | 2005 | 2006 | 2007 | 2005 | 2006 | 2007 | 2006 | 2007 | 2006 | 2007 |
| யூரோ | 120.96 | 141.58 | 160.27 | 125.10 | 130.63 | 151.63 | -14.56 | -11.66 | -4.24 | -13.85 |
| இந்திய ரூபா | 2.27 | 2.44 | 2.77 | 2.28 | 2.30 | 2.69 | -7.19 | -11.83 | -0.86 | -14.42 |
| யப்பானிய யென் | 0.87 | 0.91 | 0.97 | 0.91 | 0.89 | 0.94 | -4.30 | -6.83 | 2.26 | -4.96 |
| ஸ்டேர்லிங் பவுண் | 175.94 | 211.29 | 217.15 | 182.87 | 191.53 | 221.46 | -16.73 | -2.70 | -4.52 | -13.51 |
| ஐ.அ.டொலர் | 102.12 | 107.71 | 108.72 | 100.50 | 103.96 | 110.62 | -5.19 | -0.93 | -3.33 | -6.02 |
| சிஎஉ | 145.95 | 162.03 | 171.57 | 148.45 | 153.00 | 169.37 | -9.92 | -5.56 | -2.97 | -9.66 |
| **பயன்தரு செலாவணி வீதச்சுட்டெண் (ஆ)(இ) (2006=100)** | மாதாந்தச் சுட்டெண் | | | | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
| | | | | | | | புள்ளிக்குப்புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
| | 2005 திசெ | 2006 திசெ | 2007 திசெ | 2005 | 2006 | 2007 | 2006 | 2007 | 2006 | 2007 |
| பெ.தா.செ.வீ-24 நாணயங்கள் | 104.77 | 94.35 | 87.79 | 104.06 | 100.00 | 89.23 | -9.95 | -6.95 | -3.86 | -10.81 |
| உ.தா.செ.வீ-24 நாணயங்கள் | 100.15 | 99.26 | 106.84 | 97.66 | 100.00 | 100.17 | -0.89 | 7.64 | 2.40 | 0.17 |

(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது


(ஆ) பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் முக்கியத்துவத்தினை பிரதிபலிகின்ற விதத்தில் நிறைகள் வர்த்தகப் பங்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிக்கப்படுகிறது. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

(இ) புதிய கொ.நு.வி.சு., உ.தா.செ.வீ. கணிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

முழுவதும் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பங்கேற்றது. இவ்வாண்டில், மத்திய வங்கி சந்தையின் இரு பக்கங்களிலும் தலையிட்டது. இது செலாவணி வீதத்தின் ஒழுங்கற்ற அசைவுகளை தடுக்க உதவியது. 2007ஆம் ஆண்டில் மத்திய வங்கி மொத்தமாக ஐ.அ.டொலர் 593 மில்லியன்களை வங்கிகளுக்கிடையிலான சந்தையிலிருந்து ஈர்த்துக் கொண்டதுடன் ஐ.அ.டொலர் 716 மில்லியன்களை நிரம்பல் செய்ததன் விளைவாக 2007இல் தேறிய நிரம்பல், 2006இன் தேறிய நிரம்பலான ஐ.அ.டொலர் 484 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 123 மில்லியனாகக் காணப்பட்டது. நாணயத்தின் உயர்வானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி போட்டிக் கைத்தொழில்களில்

**வரைபடம் 5.12** **வங்கிகளுக்கிடையிலான காலாண்டுரீதியான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள்**




உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்தவதனூடாகத் தணிக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. பன்னாட்டு சந்தைகளில் அதிகரிக்கின்ற பண்ட விலைகளும் நாணயத்தின் உயர்வடையும் தாக்கத்தினை ஓரளவு எதிரீடு செய்தது.

**பெறுதிச் சாதனங்களில் வெளிநாட்டுச் செலாவணி சந்தை நடவடிக்கைகள் 2007இல் உத்வேகமடைந்தன.** வெளிநாட்டுச் செலாவணி, உடன் மற்றும் முன்னோக்கிய சந்தைகளில் சிக்கனமான கொள்வனவு மற்றும் விற்பனைக்குப் புறம்பாக இலங்கை ரூபாவை அடிப்படையாக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணித் தேர்வுகள் 2007இல் விருப்பத்தேர்வினைப் பெற்றுக்கொண்டன. எண்ணெயின் இறக்குமதி விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கெதிரான பாதுகாப்பின் பொருட்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பூச்சிய செலவு வீச்சுப் பொறியினை பயன்படுத்தி 2007 பெப்புருவரியில் டீசலை இறக்குமதி செய்வதற்கான இரண்டு பாதுகாப்பு உடன்படிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் அதன் எண்ணெய்க் கொள்வனவில் ஒரு பகுதியினை பாதுகாப்பதற்கு தொடங்கியதுடன், அதிலிருந்து சந்தை அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட பாதுகாப்பினையும் தொடர்ந்து மேற்கொண்டது. பாதுகாப்பு பொறிமுறையினூடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2007இல் ரூ.209 மில்லியன்களை சேமிக்கக் கூடியதாகவிருந்தது.

## சிறப்புக் குறிப்பு 13

## சுற்றுலாத்துறை : அதன் உள்ளார்ந்த வளத்தை அடைதல்



உலகில் பெரியளவிலும் மற்றும் விரைவாகவும் வளர்ச்சியடைந்து செல்லும் கைத்தொழில்களில் ஒன்றாக சுற்றுலாத்துறை தோற்றம் பெற்றிருக்கிறது. வருமானத்திலான அதிகரிப்புக்கள் மற்றும் பயணத்தடை தாராளமயமாக்கல் போன்றவற்றினால் மக்கள் நாடு விட்டு நாடு நகர்ந்து விருந்தோம்பும் நாட்டிற்கு புதிய வருமானத்தையும், தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்களையும் உருவாக்குகின்றனர். 2007ஆம் ஆண்டளவில் புதிய பதிவொன்றாக 900 மில்லியனை நெருங்கியதான வருகைகளுடன் பன்னாட்டு சுற்றுலாத்துறையின் எதிர்பார்ப்புக்களை விட விஞ்சியதாகக் காணப்பட்டது[1]. சுற்றுலாப் பயணிகளின் பொருட்கள் மற்றும் பணிகளின் நுகர்வு, போக்குவரத்து, விடுதியில் தங்கும் வசதி மற்றும் விருந்துபசாரம் போன்றவற்றினூடாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் சுற்றுலாத்துறை வருமானத்தை உருவாக்குகின்றது. குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு, உலகப் பொருளாதாரத்தில் பங்கு பற்றுதலை அதிகரிப்பதற்கான ஓர் முதன்மை வழியாக சுற்றுலாத்துறை மாறியிருக்கிறது.

இலங்கையின் சுற்றுலாத்துறையின் உள்ளார்ந்த வளம் இதுவரையில் முற்று முழுதாக பயன்படுத்தப் படவில்லை. இலங்கை பெற்றிருப்பதனைப் போன்ற பெறுமதியான வளங்களை சிங்கப்பூர் கொண்டிராத போதும், 2007இல் சிங்கப்பூர் 10.5 மில்லியன் விருந்தாளிகளை கவர்ந்துள்ளது[2]. இந்தியாவில் சுற்றுலாத்துறை 2002 - 2007 காலப்பகுதியில் மிகச் சிறந்த வளர்ச்சியினை அடைந்துள்ளதுடன் 2007இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஒரு உயர்ந்த வீதமான 33.8 சதவீதத்தினால் ஐ.அ.டொலா 11,956 மில்லியனிற்கு அதிகரித்திருந்தது[3]. அண்மைக் காலங்களில், மாலைதீவு இயற்கைச் சொத்துக்களான சிறிய பவளத்தீவுகளின் மாசற்ற கடற்கரை, வெப்பமண்டலத்திற்குரிய மீன்கள் மற்றும் பேரழகு வாய்ந்த சூரிய அஸ்தமனம் நிரம்பிய நீல நிறமான நீரில் சுழியோடுதல் போன்றவற்றினை சந்தைப்படுத்துவதில் வெற்றியை அடைந்திருக்கிறது. சுற்றுலாத்துறை தற்பொழுது ஆண்டிற்கு ஏறத்தாழ ஐ.அ.டொலர் 450 மில்லியனை மாலைதீவிற்கு பெற்றுக் கொடுக்கிறது. இலங்கையில் சுற்றுலாத்துறை நான்காவது மிகப் பெரிய வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் துறையாக இருந்தபோதிலும், ஆண்டிற்கு ஐ.அ.டொலர் 400 மில்லியனை மாத்திரமே உழைக்கின்றது. இலங்கையின் பெறுமதிமிக்க கலாச்சார பாரம்பரியம், மாறுபட்ட நிலவமைப்புக்கள் மற்றும் பல எண்ணிக்கையான வனவிலங்கு சரணாலயங்கள் போன்றவை எதிர்கால சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு விசாலமான வீச்சிலான சந்தர்ப்பங்களைத் தருகின்றன. ஆனால், இலங்கையில் ஒரு சுற்றுலாப் பயணிக்கு ஓரிரவிற்கான (5 நட்சத்திர விடுதி) சராசரிச் செலவாக ஏறத்தாழ ஐ.அ.டொலர் 100 - 150 காணப்படுகின்ற வேளையில் மாலைதீவு மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இது ஐ.அ.டொலர் 600 - 800 ஆகக் காணப்படுகின்றது. இந்தியா மற்றும் சீனா போன்று இலங்கை சுற்றுலாத்துறையில் வளர்ச்சியடைந்து வரும் சந்தைப் பொருளாதார நாடுகளில் பன்முகப்படுத்தி மேம்பாடடையச் செய்வதன் மூலம் விரிவடைந்து அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளது. இலங்கையின் சுற்றுலாத்துறையில் 2005ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் பங்களிப்பே உச்சமாகவிருந்து வருகிறது. மத்திய கிழக்கு நாடுகளும் இலங்கைக்கு சாத்தியமானளவு கணிசமான சுற்றுலாவை உருவாக்குகின்ற சந்தையாகக் காணப்படுகின்றது. இந்த சந்தைகளை இலக்கிட்டு நன்கு தயாரிக்கப்பட்ட தந்திரோபாய சந்தைப்படுத்தல் திட்டத்திற்கமைய இலங்கையை ஒரு சுற்றுலா மையமாக மேம்படுத்துவது நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் எண்ணற்ற பலன்களை வழங்கும்.

**அட்டவணை - சி.கு. 13.1**
**தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் சுற்றுலாப் பயணிகளின் வருகை ('000)**

| நாடு | 2006 | 2007(அ) | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| சிங்கப்பூர் | 9,751 | 10,493 | 7.6 |
| இந்தியா | 4,447 | 4,977 | 11.9 |
| இந்தோனிசியா | 4,871 | 5,505 | 13.0 |
| மாலைதீவு | 602 | 676 | 12.3 |
| இலங்கை | 560 | 494 | -11.7 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : சுற்றுலா சபை - சிங்கப்பூர்
சுற்றுலா அமைச்சு - இந்தியா
கலாச்சார சுற்றுலாத்துறை அமைச்சு - இந்தோனேசியா
சுற்றுலாத்துறை ஊக்குவிப்புச் சபை - மாலைதீவு

மேலே கூறப்பட்ட தரவுகள், இலங்கை இத்துறையில் பாரியளவான உள்ளார்ந்த வளத்தை கொண்டிருப்பதனைக் காட்டுகின்றன. தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் உள்ளார்ந்த வளத்தை அடையாளம் கண்டு இத்துறையை மேம்படுத்துவதற்காக பல்வேறு ஊக்குவிப்புக்களையும் வழங்கியுள்ளன. 2007இல் அரசாங்கம் சுற்றுலாத்துறை மேம்பாடடையச் செய்வதற்கான சலுகைகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்கியுள்ளது. 2006 வரவு செலவுத்திட்டத்தில் விதிக்கப்பட்ட விசாவிற்கான ஐ.அ.டொலர் 10 கட்டணத்தினை அமுல்படுத்துவதனை 2007 இறுதிவரை பிற்போடப்பட்டமை, சுற்றுலா விடுதிகளும் வகைப்படுத்தப்பட்ட முயற்சிகளும் இலங்கை மின்சபையினால் ''தாழ்ந்த கட்டணப்'' பிரிவாக வகைப்படுத்தப்பட்டமை, சுனாமியால் பாதிக்கப்பட்ட விடுதிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களின் மூலதனக் கொடுப்பனவுகளுக்கு சட்ட இசைவுத் தாமதம், சுற்றுலாத்துறை தொழிற்பாடுகளுக்காக செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டப்பட்ட வரியினை ஒரு வருடத்திற்கு தற்காலிகமாக பிற்போட்டமை மற்றும் இறுதிவரையில்

[1] உலக சுற்றுலா அமைப்பு
[2] சுற்றுலா சபை - சிங்கப்பூர்
[3] சுற்றுலா அமைச்சு - இந்தியா

பெறுமதி கூட்டப்பட்ட வரியின் பிந்திய கொடுப்பனவிற்கான தண்டப்பணத்தினை 2008 மாச்சு இறுதிவரை நிறுத்தி வைத்தமை போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு தற்காலிகமான நிவாரண பொதியொன்றினை 2007 யூலையில் நிதி அமைச்சு அறிவித்தது.

2007 ஒத்தோபர் 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்த 2005ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க சுற்றுலாத்துறை சட்டத்தின் அமுலாக்கமானது 2007இல் சுற்றுலாத்துறையில் ஒரு குறிப்பிடத்தக்களவான அபிவிருத்தியாகும். புதிய சுற்றுலாத்துறை சட்டதின் வெளியீட்டுடன் கடந்த 41 ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த 1966ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை சுற்றுலாத்துறை சட்டம் நீக்கப்பட்டது. இதன் விளைவான நிர்வாகப் பன்முகப்படுத்தலின் மூலம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை, இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம், இலங்கை மாநாட்டு பணியகம், இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுலா விடுதி முகாமைத்துவ நிறுவகம் போன்ற சுதந்திரமாகத் தொழிற்படுகின்ற நான்கு நியதிச் சபைகளை உருவாகுவதற்கு வழிவகுத்தது[4]. இப்புதிய சபைகள் சுற்றுலாத்துறை தொடர்பான அபிவிருத்தி திட்டமிடல், நியமங்களை நிர்ணயித்தல், சந்தைப்படுத்தலும் மேம்படுத்தலும் மற்றும் மனிதவள அபிவிருத்தி என்பவற்றை முன்னெடுத்து செல்லும். இந்த நிர்வாகக் கட்டமைப்பினை நிர்ணயித்ததன் முக்கிய பண்பாக சுற்றுலாத்துறையின் அனைத்து அம்சங்களினையும் மேம்படுத்துவதற்காக அரசாங்கத்துடன் ஒரு ஆரோக்கியமான பங்குடமையை உருவாக்குவதற்கு பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான வியாபார தொழிற்பாட்டாளர்களுக்கு சமமான சந்தர்ப்பங்களை வழங்குவது என்பது காணப்படுகின்றது. புதிய சுற்றுலாத்துறை சட்டமானது சுற்றுலாத்துறையின் முகாமைத்துவம், கட்டுப்பாடு ஆகியவற்றில் மிகவும் காத்திரமான அரச, தனியார் பங்குடமைக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாதகமான பிரச்சாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சனைகள் என்பன தாழ்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு இட்டுச் சென்றது, என்ற உண்மையை அங்கீகரிக்கின்ற அதேவேளையில் போதுமானளவு கவனிப்பையும் ஒருமுகப்படுத்தப்பட்ட முயற்சியினையும் பெறவேண்டிய பல்வேறு அம்சங்களை இந்தத் துறை கொண்டுள்ளது. பெரும்பாலான விருந்தாளிகளுக்கு மிகவும் கவர்ச்சிகரமான "சூரியனும் கடற்கரை சுற்றுலாவும்" காணப்பட்டாலும் மாற்றீடான சுற்றுலாத்துறையான சூழல், நீர் விளையாட்டும் துணிகரச் செயலும், வரலாறு சார்ந்த, ஆயுர்வேத, கடல் மற்றும் குழிப்பந்தாட்டாச் சுற்றுலா போன்றவை மிகச் சிறந்த உள்ளார்ந்த வளத்தைக் கொண்டிருந்தாலும் மிகச் சிறியளவிலேயே மேம்படுத்தப்பட்டுள்ளன. சுற்றுலாவின் பன்னாட்டு வளர்ச்சியுடன் சூழல் சுற்றுலா அதிகளவில் பிரபல்யமடைந்திருக்கிறது. நடைப்பயணம், துவிச்சக்கர வண்டிச் சவாரி, பறவைகளை அவதானித்தல், புகைப்படக் கலை மற்றும் வன வாழ்க்கை போன்ற பல செயற்பாடுகள் சுற்றுலாப் பயணிகள் ஈடுபட முடியுமென்பதால் இலங்கை வனவிலங்கு சவாரி சுற்றுலாவிற்கு பொருத்தமான அமைவிடமாகக் காணப்படுகின்றது. மேலும், இயற்கைக் காட்சியுடன் கூடிய மாறுபட்ட நிலவமைப்புக்களைக் கொண்ட நிலையில் துணிகரச் செயலுக்கான சுற்றுலாவிற்கான சாத்தியத்தன்மையையும் சிறப்பாக கொண்டிருக்கின்றது. இன்று இந்தியாவில் ஆயுர்வேத சுற்றுலாவானது நலச் சுற்றுலாவின் சந்தையில் விரைவான ஒரு பரிமாணமாக உருவாகி வருகின்றது. இலங்கையும் தனது ஆயுர்வேத சுற்றுலாத்துறை சந்தையினை உயர்த்துவதற்கும் இதனை எமது சுற்றுலாத்துறை தோற்றப்பாட்டின் ஒரு இணைந்த பகுதியாக ஆக்குவதற்குமென உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கின்றது. இதேவேளை, கிழக்கிலும் நாட்டின் ஏனைய சில பகுதிகளிலும் உபயோகிக்கப்படாத கடற்கரைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் "சூரியனும் கடற்கரை சுற்றுலாவும்" மேலும் விரிவாக்கப்பட முடியும்.

சுற்றுலாத்துறையினால் எதிர்கொள்ளப்படும் மிகப் பெரிய சவாலாக இலங்கையில் சுற்றுலா தொழிற்படுத்துநர்களின் நம்பிக்கைத் தன்மையை தக்க வைத்துக் கொள்வதும் இலங்கையிலிருந்து வேறு இடங்களுக்கு பயணிக்கச் செல்வதனை தடுத்தலும் காணப்படுகின்றது. இக்காரணத்தினால் பன்னாட்டு ரீதியாக அதிகளவான தீவிரமான சந்தைப்படுத்தும் முயற்சித் திட்டங்களும், விளம்பர பிரச்சாரங்களும் அமுல்படுத்தப்பட வேண்டும். உலகப் பிரயாண பங்குபற்றுதலும் சுற்றுலா தொழிற்படுத்துநர்கள் மற்றும் உலக சமூகத்தில் இலங்கையின் நம்பிக்கையை அதிகரிப்பதற்கு துணை புரியம். இதேவேளை, விடுதி, வேறு தங்குமிட வசதிகள், வங்கியியல் வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்ற வசதிகளை பன்னாட்டு தரத்திற்கேற்ப அபிவிருத்தி செய்வதன் மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான படிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சுற்றுலாத்துறை சிலவேளைகளில் மனிதாபிமானத்தை துஷ்பிரயோகப் படுத்துவதுடன் தொடர்புபட்டிருப்பதனால் இதனைத் தடுப்பதற்குரிய . சகல சாத்தியமான படிமுறைகளை மேற்கொள்வது அவசியமாகின்றது.

'அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற உதவுதொகைகள் மற்றும் ஊக்குவிப்புக்களிலே தனியார் துறையினை சுற்றுலாத்துறையில் ஈடுபடச் செய்வது தங்கியுள்ளது என்று நம்பப்படுகின்றது. அரசாங்கத்தின் கடமையானது வசதியளித்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல். திட்டமிடல் மற்றும் அத்திட்டமிடலை முழுமொத்த பொருளாதார மற்றும் சமூக திட்டமிடலுடன் ஒருங்கிணைத்தல் போன்றதொன்றாகக் காணப்படுகின்றது. இலங்கையின் சுற்றுலாத்துறை பல்வேறுபட்ட சவால்களை வெற்றி கொள்ள வேண்டியிருப்பினும் இத்துறை அரச தலையீடில்லாமல் தங்களைத் தாங்களே அபிவிருத்தி செய்வதற்குரிய ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். இது தொடர்பான நல்லதொரு உதாரணமாக சந்தைத் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு தமது சொந்த வலுவினால் அபிவிருத்தியடைந்த ஆடைக் கைத்தொழில் காணப்படுகின்றது.

[4] 2005ஆம் ஆண்டு 38ஆம் இலக்க சுற்றுலாச் சட்டம்

புதிதாக விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் காணப்படும் அழகான கடற்கரைகள், ஆழமற்ற கடல் மற்றும் இயற்கையின் கொடைகள் போன்றவை நாட்டின் சுற்றுலாத்துறையின் உள்ளார்ந்த வளத்தை பெருமளவு உயர்த்துகின்றது. இந்த மூலவள அடிப்படையினை விரைவாக பயன்படுத்துவதற்கு தனியார்துறை அநேகமாக வெளிநாட்டு ஒத்துழைப்புடன் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

உலகிலேயே பிரசித்திமிக்க சுற்றலாப் பயணிகளின் அமைவிடமாக இலங்கை நீண்டகால புகழினைக் கொண்டதாக காணப்படுகின்றது. நன்கு திட்டமிடப்பட்டு முகாமை செய்யப்படுமானால் சுற்றுலாத்துறையை அதிகளவு இலாபமுடையதாகவும் மற்றும் மிகக் குறைந்த பாதகமான சமூக, சூழல் தாக்கங்களுடன் உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதறகான பங்களிப்பினை வழங்க முடியும். மேம்படுத்தல் முயற்சியின் ஒரு பகுதியாக இலங்கை மீதான உணர்வு மற்றும் எதிர்மறையான பிரசித்தம் போன்றவற்றை அதன் முகவர்களூடாகவும் வெளிநாட்டு தொடர்புகளூடாகவும் முகாமை செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். இந்தத் துறை ஒரு பில்லியன் டொலர் துறையாக உருவாவதற்கான சாத்தியத் தன்மையைக் கொண்டிருக்கின்றது. ஆனால் அனைத்து ஆர்வலர்களும் சவாலுக்கு எதிராக எழுந்தால் மாத்திரமே அது சாத்தியமாகும்.